
# பெர்ட்ராண்ட் ரசலும்
# வேதாத்திரி மகரிஷியும்





அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1. பெர்ட்ரண்ட் ரசலும் வேதாத்திரி மகரிஷியும்
2. போரும் அணுகுண்டும்
3. போரில்லா நல்லுலகம்:
4. ரசலின் அறிவுக்கோட்பாடு
5. அறிவியியல் தத்துவம்ஸ
6. சமயமும் இறையியலும்ஸ
7. அமைதிவாதம், யுத்தம், அணுகுண்டுகள்.
8. பொதுவுடைமையும் சமவுடைமையும்
9. பெண்கள் உரிமைகள்
10. பெர்ட்ராண்ட் ரசலின் தத்துவத்தில் தருக்க அணுவாதம் வேதாத்திரியத்தின் மொழிச் சிந்தனைகளும்

பறந்துபட்ட இந்நிலவுலகில பல்வேறு அறிஞர்கள், சிந்தனையாளர்கள், தத்துவஞானிகள் வாழ்ந்து வருகின்றனர்.

மெய்யியல் கோட்பாடுகளும் அறிவார்ந்த சிந்தனைகளும் அனைத்து மக்களுக்கும் பொதுவானவை.

அதற்கேற்ப தோன்றிய  தத்துவஞானிகள் பலர்.  சான்றாக திருவள்ளுவர், திருமுலர். தாயுமானவர். வள்ளலார், பாரதியார், சாக்ரட்டிஸ், அரிஸ்டாடில்.

இவர்களுக்குப் பின் இவர்களின் வழியில் தோன்றியவர்களே பெட்ராண்ட் ரசலும் வேதாத்திரி மகரிஷியும் ஆவார்கள்

தங்கள் எழுத்துக்களால் தத்துவங்களால் மானுடத்தை தட்டி எழுப்பிய புரட்சியாளர்கள். இந்த தத்துவவாதிகள் இருவரையும் ஒப்பீடு செய்வோம்.  வாருங்கள.

பெர்ட்ராண்ட் ரசலும் வேதாத்திரி மகரிஷியும்  ஒரு பார்வை

பெர்ட்ரண்டு ஆர்தர் வில்லியம் ரசல், 3ஆவது "ஏர்ல்" ரசல் 1872–1970): இங்கிலாந்தின் மெய்யியலாளர்,

வேதாத்திரி மகரிஷி (1911–2006) இந்தியாவின் தமிழகத்தில் தோன்றிய பாமர மக்களின் தத்துவஞானி

பெர்ட்ராண்ட் ரசல் மே 18, 1872 அன்று ஐக்கிய இராச்சியம், மான்மத்சயரில், டிரெல்லெக் என்ற ஊரில் பிறந்தார்.

அவர் தந்தைவழிப் பாட்டன், முதல் ஏர்ல் ரசல், பெட்போர்ட் ஆவார். அவர் விக்டோரியா மகாராணியால் அரசு அமைக்க அழைக்கப்பட்டு, அரசியின் பிரதம மந்திரியாக 1840, 1860களில் பணி புரிந்தார்.

வேதாத்திரி மகரிஷி ஒரு ஏழை நெசவாளியின் மகனாக 14.08.1911 தென் தமிழகத்தில் கூடுவான்சேரியில் அவதரித்தார்.

ரசல் கணித மேதை, ஏரணவியலர் (தருக்கவாதி), சமூக சீர்திருத்தவாதி, அமைதிவாதி ஆவார்.

வேதாத்திரி மகரிஷி ஒரு தத்துவஞானி, சமூக சீர்திருத்தவாதி, ஆன்மீகப் புரட்சியாளர், உலக அமைதிக்கு வழி காட்டியவர்.

வேல்சில் பிறந்த ரசல் தனது வாழ்க்கையை பெரும்பாலும் இங்கிலாந்தில் கழித்தாலும், தான் பிறந்த இடமாகிய வேல்சில் இறந்தார்.

பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஒரு ஆங்கில தத்துவஞானி ஆவார்.

அவரது நீண்ட வாழ்நாளில், பல்வேறு தலைப்புகளில் ஏராளமான அறிவுசார் படைப்புகளை உருவாக்கினார்.

அவர் கணிதம், மதத்தின் பிரச்சினைகள், தத்துவ வரலாறு, அரசியல், கற்பித்தல் மற்றும் அறிவுக் கோட்பாடு ஆகியவற்றில் ஆர்வம் கொண்டிருந்தார்.

பொதுவாக, ரசலின் தத்துவம் வேறுபட்ட கருத்துக்கள் மற்றும் பார்வைகளின் கலவையால் வேறுபடுகிறது.

எவ்வாறாயினும், இத்தகைய தேர்ந்தெடுக்கப்பட்ட தன்மை எழுத்துக்களின் தெளிவு மற்றும் தத்துவஞானியின் சிந்தனையின் துல்லியத்துடன் செலுத்துகிறது.

ரசல் 1900களின் தொடக்கத்தில் பிரித்தானிய இலட்சியவாதத்திற்கு எதிராகக் கிளர்ச்சி என்பதைத் தொடங்கினார்,

மேலும் பகுப்பாய்வுத் தத்துவம் என்பதை அவர் மாணவர் விட்கன்ஸ்டைன், பெரியவர் கோட்லோப் பிரேக என்பவர்களுடன் சேர்ந்து நிறுவினார்.

ஏ. என். ஒயிட்ஹெட் உடன் சேர்ந்து, பிரின்சிப்பியா மாத்தமாட்டிக்கா (கணிதத்தின் கோட்பாடுகள்) என்னும் நூலை எழுதி, கணிதத்தை தருக்கத்தின் அடிப்படையில் நிறுவ முயன்றார்.

அவரது தத்துவக் கட்டுரை ''ஆன் டிநோட்டிங்'' (On Denoting) ''தத்துவத்தின் வழிகாட்டி எடுத்துக்காட்டு'' எனக் கருதப்படுகிறது.

இந்த இரு புத்தகங்களும் ஏரணம், கணிதம், மொழியியல், கணங்கள் கோட்பாடு, பகுப்பாய்வுத் தத்துவம் முதலியவற்றின் மேல் பரவலான தாக்கத்தை ஏற்படுத்தின.

ரசல் போர் மற்றும் காலனியத்தின் எதிர்ப்பாளர், தடையிலா வணிகத்தின் ஆதரவாளர் முதலாம் உலகப் போரின் போது தனது போர் எதிர்ப்புச் செயல்களால் சிறையில் அடைக்கப்பட்டார்.

இட்லருக்கு எதிராகப் பிரச்சாரம் நடத்தினார், சோவியத் ஒன்றியத்தின் வரம்பற்ற அதிகாரத்தை எதிர்த்தார்.

அணுகுண்டு கைவிடுதலையை ஆதரித்தார், ஐக்கிய அமெரிக்காவின் வியட்நாம் தலையீட்டை எதிர்த்தார்.

ரசலுக்கு, அவரின் பலவகைப்பட்ட எழுத்துகளினால், ''மானுட இலட்சியங்களுக்காகவும், வழிகாட்டியாக அமைந்தன.

வேதாத்திரி மகரிஷி எழுதியது, பேசியது, பாடியது அனைத்தும் ''வேதாத்திரியமாக'' இன்று உலகெங்கும் உலா வந்து கொண்டிருக்கிறது.

உலகெங்கும் உள்ள அறிவுத்திருக்கோயில்களிலும், மனவளக்கலை மன்றங்களிலும் ஏன் சுமார் 30 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் வேதாத்திரியம் பாடத்திட்டமாகப் போதிக்கப் பட்டு வருகிறது

ரசல் குடும்பம் இங்கிலாந்தில் பல நூற்றாண்டுகளாகச் சமூகத்தில் புகழ்பெற்று இருந்தது. டியூடர் வம்சம் அரசாளும் போது, அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

பிரித்தானியாவின் விக் (லிபரல் கட்சி) கட்சியின் பெரும் புள்ளிகளாகி, பிரித்தானியாவின் ஒவ்வொரு பெரும் அரசியல் மாற்றங்களில் போதும், சீரிய பங்கு வகித்தனர்.

சான்றாக 1536–ல் மடங்களின் ஒழிப்பு, 1688–89 காலத்தில் குளோரியசு புரட்சி (Glorious Revolution,1832) மாபெரும் சீர்திருத்தச் சட்டங்கள் இவற்றில் பங்கு வகித்தனர்.

வேதாத்திரி மகரிஷியோ சாதாரண ஒரு வறுமையான நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர்.

ரசலின் பெற்றோர்கள் அக்காலத்தில் மிக முற்போக்கான கொள்கையுடையவர்களாக இருந்தனர்.

வேதாத்திரியாரின் பெற்றோர்கள் அக்காலத்தில் பக்தி மார்க்கத்தில் சிறந்து விளங்கியவர்கள்.

ரசலின் தந்தை வைகௌண்ட் ஆம்பர்லி ஓர் உயிரியலாளர்; இறைமறுப்புக் கொள்கை கொண்டவர்;

தன் மனைவி தம் பிள்ளைகளின் ஆசிரியர், டக்ளஸ் ஸ்பால்டிங்கோடு காதல் கொண்டபோது அதனை இயல்பாய் மதித்தார்.

இருவரும்,அக்காலத்தில் நடத்தை பிறழ்வாகக் கருதப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு என்ற கொள்கைக்கு முதன் ஆதரவாளர்களாய் இருந்தனர்.

வேதாத்திரியின் தந்தையும் தாயாரும் பல ஆன்மீகக் கதைகைளைச் சொல்லி வேதாத்திரியை வளர்த்தார்கள்.

பிரித்தானியாவின், பயன்பாட்டுவாதத் தத்துவவாதியான ஜான் ஸ்டுவர்ட் மில் என்பவர் ரசலின் மானசீக ஆசானாவார்.

ரசல் பிறந்த அடுத்த வருடம் மில் இறந்து விட்டாரெனினும், மில்லின் எழுத்துகள் ரசலிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

ரசலின் இளமைப் பருவம் மிகத் தனிமையாக இருந்ததனால் பல தடவை தற்கொலை செய்து கொள்ள எண்ணினார்.

தன் சுய சரிதையில் தன் அதீத விருப்பங்கள் பால் உணர்ச்சிகள், மதம், கணிதம் ஆகியவை எனவும், கணிதத்தை பற்றி மேலும் மேலும் அறிய வேண்டுமென்ற ஆவல்தான் தற்கொலையில் இருந்து தன்னைத் தடுத்தது எனவும் கூறுகிறார்.

வேதாத்திரி சிறு வயதிலேயே நெசவு செய்யும் போதே இறைத் தேடலுக்குப் பயணமானார்.

வீட்டிலேயே ரசலுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டது. அவர் தமயன் பிராங்க், ரசலுக்கு யூக்ளிட்டின் கணிதத்தை அறிமுகம் செய்து வைத்தார்; அது அவர் வாழ்க்கையை உருமாற்றியது.

வேதாத்திரி மகரிஷியோ கூடுவான்சேரி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மூன்றாம் வகுப்பு வரைதான் படித்தார்.

ரசல் கேம்ப்ரிட்ச் டிரினிடி கல்லூரியில் உதவித் தொகையுடன் 1890இல் தனது கணிதக் கல்வியைத் தொடர்ந்தார்.

அங்கு ஜி.இ.மூர் மற்றும் ஆல்பிரட் நார்த் ஒயிட்ஹெட் முதலியவர்களின் நட்பைப் பெற்றார்.

விரைவிலே கணிதம், தத்துவம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றார். 1983இல் இளங்கலைப் பட்டமும், 1895ல் பெல்லொஷிப்பும் பெற்றார்.

ரசலுக்கு ஹயேடலவஉை யீடைடிளடியீல இலக்கியத்துக்கான நோபல் பரிசு (1950) கிடைத்தது.

வேதாத்திரி மகரிஷி தனது சுய முயற்சியினால் ஆங்கிலம் படித்தார். பல குருமார்களை சந்தித்து தனது ஆன்மீகப் பயணத்தைத் தொடர்ந்தார்.

1896ல் ரசல் ''ஜெர்மன் சமுதாய மக்களாட்சி'' என்ற தனது அரசியல் ஆய்வு நூலைப் பதிப்பித்தார்.

வாழ்க்கை முழுவதும் அரசியல் மற்றும் சமுதாய கோட்பாடுகளில் ஆர்வம் செலுத்தினார்.

1896ல் ஜெர்மன் சமுதாய மக்களாட்சி பற்றி ''லண்டன் ஸ்கூல் ஆஃப் எகொனாமிக்ஸ்''என்ற கல்லூரியில் பாடம் கற்பித்தார்.

அங்கேயே அதிகாரம் பற்றிய அறிவியல் தொடர்பாக 1937ல் உரையாற்றினார்.

1902ல் சிட்னி மற்றும் பியட்ரிஸ் வெப் ஆகியோர் தொடங்கிய ''கோ–எபீசியண்ட் டைனிங் கிளப்'' என்ற மன்றத்தில் அங்கத்தினரானார்.

1905ல், மைண்ட் என்ற தத்துவ இதழில் இவருடைய கட்டுரை 'ஆன் டிநோடிங்' (On Denoting) வெளியானது. 1908ல் ராயல் கழகத்தின் உறுப்பினர் ஆனார்.

வேதாத்திரி மகரிஷி '' ''அன்பொளி'' என்ற மாத இதழைத் தொடங்கி தனது தத்துவங்களை வெளியிட்டார். இன்றும் இந்த மாத இதழ் வெளிவந்து கொண்டிருப்பது சிறப்பாகும்.

ரசல் ஒயிட்ஹெட்டுடன் சேர்ந்து 'கணித கோட்பாடுகள் என்ற நூலை எழுதினார். 1910 ல் 'கணிதத்தின் அணுகுமுறை' என்ற மற்றொரு நூலை வெளியிட்டார். இவ்விரு நூல்களும் ரசலுக்கு மிகப்பெரும் புகழைத் தேடித் தந்தன.

வேதாத்திரி அஞ்சல்துறை வேலை, புத்தக பைண்டிங், பால் வியாபாரம் என்று கடைசியாக நெசவுத் தொழில் பெரும்தொழில் அதிபராகி நஷ்டமும் அடைந்தார்.

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களைப் பல கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு வேதாத்திரி மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார். தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958–ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம்

வேதாத்திரி மகரிஷி சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகள் ஞானக்களஞ்சியமாக உலகில் உலா வந்து கொண்டிருக்கின்றன.


உலகெங்கும் உள்ள அறிவுத்திருக்கோயில்களிலும், மனவளக்கலை மன்றங்களிலும் ஏன் சுமார் 30 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் வேதாத்திரியம் பாடத்திட்டமாகப் போதிக்கப்பட்டு வருகிறது.

தற்போது இணையம் வழியாக ஆன்லைன் வகுப்புகளிலும் வேதாத்திரியம் பயிற்றுவிக்கப்படுகிறது. ( vethathiriam for Wordld Peace - YouTube · SKY Yoga TV)

இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில :

1. வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
2. வாழ்வியல் விழுமியங்கள்
3. பிரம்மஞான சாரம்
4. நான் யார் ?
5. ஞானக்களஞ்சியம்




கொங்கு நாட்டில் பொள்ளாச்சி நகருக்கு அருகே வால்பாறை மலையோரத்தில் ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம் வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த வேதாத்திரி மகரிஷியின் உள்ளத்தில் வறுமை என்றால் என்ன ? கடவுள் என்பது எது ? அதை ஏன் காண முடியவில்லை ? மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார்.

அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

46 ஆம் அகவையில் உலக அமைதிக்காக 'உலக சமாதானம்' World peace என்ற 200 பாடல்கள் நூலை எழுதி 1957ல் வெளியிட்டார்.

இந்த இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) நூலை பாடத்திட்ட வழி பள்ளி, கல்லூரிகளில் பரப்ப வாழ்நாள் இறுதிவரை உழைத்து வெற்றி பெற்றார். இன்று பல பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப்படிப்பில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

1940, 1950 களில் ரசல் பிபிசி (BBC Radio) யில் பேசிய பிறகு கல்லூரி வட்டங்களுக்கு வெளியே மிக்க புகழ் பெற்றவராக விளங்கினார்.

ஊடக கட்டுரைகளின் பிரதான பாத்திரமாகி, உலகின் எல்லா விடயங்களைப் பற்றியும் அவரிடம் கருத்துகள் கேட்கப்பட்டன.

இவருடைய 'மேற்குலகத் தத்தவத்தின் வரலாறு' நூல் நல்ல விற்பனையாகி, வாழ்நாள் வரை தேவையான வருமானத்தைக் கொடுத்தது.

# போரும் அணுகுண்டும்

''தற்போது அமெரிக்கா மட்டும் தான் அணுகுண்டை கைவசம் வைத்திருக்கிறது. சோவியத் யூனியன் தனது ஆக்கிரமிப்பு செயல்களால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை அதன் செல்வாக்கின் கீழ் வைக்க முயற்சிக்கிறது.

சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பு தொடர்ந்து நடக்குமாயிருந்தால், அது அணுகுண்டினை கையெடுக்கும் முன்பே அதனுடன் யுத்தம் புரிவது சிறந்த வழியாகும்.'' என ரசல் குறிப்பிட்டார்.

ஏனெனில் சோவியத் யூனியனிடம் அணுகுண்டு இல்லாமலிருந்தால் மேற்கின் வெற்றி சுலபமாக கிடைத்து,

போர் அழிவுகள் குறைவாக இருக்கும் என்று ரசல் கருதினார். ஆனால் பலர் ரசல் அணுகுண்டின் முதல் பிரயோகத்தை ஊக்குவிக்கிறார் என நினைத்தனர்.

அவைகளில் முக்கியமானவை அணுகுண்டு ஆயுதத்தடையும், வியட்நாம் போரை எதிர்ப்பதும் ஆகும்.

அணுகுண்டு கைவிடலைக் கோரி, 11 நன்கறியப்பட்ட அணு இயற்பியலறிஞர்கள் மற்றும் மேதைகளால் கையெழுத்திடப்பட்ட ரசல்–ஐன்ஸ்டைன் பிரகடனம் 1955ல், வெளியிடப்பட்டது.

அவர் உலகத் தலைவர்களுக்கு இது தொடர்பான பல கடிதங்களை எழுதித் தெளிவுபடுத்தினார்.

''குட் டைம்ஸ், ஒண்டர்புல் டைம்ஸ்'' என்ற இரு போரெதிர்ப்புத் திரைப்படங்களை எடுத்த லியோனல் ரோகோசின் என்பவருடன் நட்பு கொண்டிருந்தார்.

பல இளைய புதிய இடதுசாரி இயக்க உறுப்பினர்களுக்கு ரசல் நாயகனாக தோன்றினார்.

1960 களில் அமெரிக்காவின் இன அழிப்பு என கருதப்பட்ட செயல்களுக்காக மிகவும் கவலை கொண்டார்.

1963ல் சமூகத்தில் தனி நபர் சுதந்திரம் தொடர்பில் எழுத்தாளர்களுக்காக ஆரம்பிக்கப் பட்ட "ஜெரூசலம் பரிசு ?'' என்ற பரிசினை முதல் வருடத்தில் பெற்றார்.

1965ல் தொழில் கட்சி அரசு வியட்நாம் போருக்கு துருப்புகளை அனுப்புமோ என்ற கவலையில் தனது பிரித்தானிய தொழில் கட்சியின் உறுப்பினர் அட்டையைக் கிழித்தெறிந்தார்.

போரின் கொடுமைகளையும் அணுகுண்டின் தீமைகளையும் ''அணுவிஷம்'' என்ற நாடகத்தின் வாயிலாக வேதாத்திரியம் தனது உலக அமைதிக்கான விதைகளை விதைத்துள்ளது.

## வேதாத்திரியம் தரும் போரில்லா நல்லுலகம் :

உலகமென்ற மண்மீது அனைவரும் பிறந்தோம்,
உயிர்காக்கும் காற்று ஒன்றே மூச்சு விடுவதற்கு
உலகெங்கும் ஒளி வீசும் சூரியனும் ஒன்றே
உள்ள கடல் ஒன்றே நீர் ஆவியாகிப் பொழிய
உலகில் இன்று உள்ளோர் இதிலொன்றும் செய்ததில்லை
ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப் போவார்.
உலகில் ஒரு குழுவினர் மற்றவரைக் கொன்று
உயிர் வாழ்தல் நீதியெனில் கொலைஞர்களே மிச்சம். (ஞாக.பா.)

உலகில் பிறந்த நாம் யாரும் நாம் சுவாசிக்கும் காற்றையோ, உலகிற்கு ஒளிகொடுக்கும் சூரியனையோ, நம் வாழ்க்கைக்கு அவசியமான நீரையோ, இந்த நிலத்தையோ செய்யவில்லை.

ஆனால் அதற்கு உரிமையை மட்டும் அனைவரும் பெற முயற்சியை மேற்கொள்கிறோம். இதன் விளைவே உலகில் போர் உருவாகிறது.

போரினால் ஏற்படும் துன்பங்களை ஒரு நிமிடம் உலக மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது.

பொருள் இழப்பு, உயிர் இழப்பு, உறுப்புகள் இழப்பு, குடும்ப உறுப்பினர் இழப்பு, இப்படி இன்னும் எவ்வளவோ. இவைகளில் எதையும் நம்மால் ஈடு செய்யமுடியுமா. யோசிக்கவேண்டும். உலக அறிஞர் பெருமக்கள் ஒன்றுகூடி ஒரு திட்டம் தயாரிக்கவேண்டும்.

இந்தப் போரை எப்படி தவிர்ப்பது என்று ஆராய வேண்டும்.

ஏற்கனவே நம்மிடம் இருக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையைக் கூட்டி, அச்சபையில் உள்ள பாதுகாப்புச் சபையின் பொறுப்பில் எல்லா நாடுகளின் எல்லைப் பாதுகாப்பையும் கவனிக்கும் பொறுப்பையும் கண்காணிக்கும் பொறுப்பையும் அளிக்க வேண்டும்.

எல்லா நாடுகளும் அதன் அதிகாரத்திற்கு ஒத்துழைப்பு

நல்கவேண்டும். போரைத் தவிர்க்க முடியும். போருக்காகும் செலவுகளை நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு செலவழிக்க வேண்டும். உலகம் அமைதி பெரும். வறுமை நீங்கும். ஒற்றுமை உருவாகும்.

ரசலுக்கு ஜீன் 9, 1949 அன்று, அரசரின் பிறந்தநாள் விழாவில், அவருக்கு ஆர்டர் ஆஃப் மெரிட் கொடுக்கப்பட்டது. அடுத்த வருடம் இலக்கியத்துக்கான நோபல் பரிசும் கிடைத்தது.

வேதாத்திரி மகரிஷியும் உலக அமைதிக்கான திட்டங்களை ஐக்கியநாடுகள் சபையில் சமர்ப்பித்துள்ளார்.

அச்சபையில் உலக அமைதி பற்றியும் உரையாற்றி உள்ளார். நிச்சயமாக ஒரு நாள் அமைதிக்கான நோபல் பரிசு வேதாத்திரியத்திற்கு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

## அரசியல் நோக்கங்கள்

ரசல் 1950, 1960 களில் பல அரசியல் இயக்கங்களுக்கு ஆதரவாகத் தனது கருத்துக்களை வெளியிட்டார்.

ரசல் தன் வரலாற்று நூலை மூன்று தொகுதிகளாக 1967,1968,1969 களில் வெளியிட்டார். உடல்நிலை தளர்ந்தாலும், இறுதி வரை தெளிவான மனத்துடனும், சிந்தனையுடனும் இருந்தார்.

23 நவம்பர் 1969 அன்று தடைம்ஸ் செய்தித்தாளுக்கு செகோஸ்லாவாக்கியாவில் நடைபெற இருக்கும் போலிக் குற்றச்சாட்டு நீதிமன்ற வழக்குகள் மிகவும் கவலை தருபவையாக உள்ளன என எழுதினார்.

அதே மாதம், ஐக்கிய நாடுகள் பொதுச் செயளாளர் ஊதாண்டுவுக்கு, அமெரிக்கா வியட்நாமில் செய்த சித்திரவதை, இன அழிப்பு பற்றி ஒரு சர்வதேச குற்ற விசாரணை மன்றம் ஏற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அடுத்த மாதம், சோவியத் பிரதமர் அலெக்சி கோசிஜனிடம், எழுத்தாளர்கள் சங்கத்திலிருந்து அலெக்சாண்டர் சோல்ஷனிஸ்தனை வெளியேற்றுவதற்குக் கண்டனம் தெரிவித்தார்.

31, ஜனவரி 1970 அன்று ரசல் இஸ்ரேலின் பாலஸ்தீனிய தரை ஆக்கிரமிப்பைக் கண்டித்து, இஸ்ரேல் ஆக்கிரமித்த பாலஸ்தீனிய நிலங்களில் இருந்து விலகி வரவேண்டும் என அறிக்கை வெளியிட்டார்.

அதுதான் ரசலின் வாழ்க்கையிலேயே இடம் பெற்ற கடைசி அரசியல் நடவடிக்கையாகும்.

ரசல் இன்ப்ளுவென்சா சுரத்தினால், வேல்சில் உள்ள தன் வீட்டில் 2ம் பிப்ரவரி, 1970ல், இறந்தார்.

அவரின் விருப்பப்படி அவர் உடல் மதச் சடங்குகள் எதுவும் இல்லாமல் தகனம் செய்யப்பட்டு, சாம்பல் வேல்ஸ் மலைகளின் மீது தெளிக்கப்பட்டது.

தத்துவம் ஜி.டபிள்யு.எஃப்..ஹெகல் என்பவராலும், எஃப்.எச்.பிராட்லி என்பவராலும் பெரும் விமர்சனத்திற்குள்ளாகியது.

இந்த விமர்சனத்தின் எதிரொலியாக 30 வருடங்களுக்குப் பின், வியன்னாவில் தருக்க பாசிடிவிஸ்டுகளினால் ரசல் மற்றும் மூர் ஆகியோர்களைப் பற்றிய பிழையான எண்ணக்கருக்கள் விதைக்கப்பட்டன.

ரசல் குறிப்பாக இலட்சியவாதத்திற்கும், ஒட்டுசேர்வாதத்திற்கும் (coherentism) சார்பான 'உள் உறவுகள் சித்தாந்தம்' (doctrine of internal relations) என்பதை விமர்சனம் செய்தார்.

ரசலின் கூற்றின்படி, அந்த சித்தாந்தம் ஒரு பொருளை அறிந்து கொள்ள, அதனுடனுள்ள அனைத்துப் பொருள்களின் உறவையும் அறிய வேண்டும் என சொல்கிறது.

ரசல், இச்சித்தாந்தத்தின் பிரகாரம் அந்தரம், காலம், விஞ்ஞானம், எண் இவற்றை புரியகொள்ள முடியாமல் போகும் என்றார்.

ரசலும், மூரும் அவர்கள் கணிப்பில் தத்துவத்தில் இருக்கும் பொருளற்ற, ஒட்டுசேராத உறுதிக் கூற்றுகளை இல்லாமலாக்க முயன்றனர்.

அவர்கள் இருவரும் வாதத்தில், தத்துவக் கோட்பாடுளிலுள்ள துல்லியம் மற்றும் தெளிவு ஆகியவற்றை, சரியான மொழியின் பிரயோகத்தினால் மிக எளீமையான இலக்கண பகுதிகளாக உடைத்து அடைய முயன்றனர்.

மேலும் ரசல் முறையான தருக்கம், விஞ்ஞானம் ஆகியவை தத்துவவாதியின் முக்கிய உபாயங்கள் என்றார்.

இன்னும் சொல்லப் போனால், முன்னால் இருந்த தத்துவவாதிகளைப் போல் அல்லாது, தத்துவத்திற்கு ஒரு தனி வழி இல்லை என்று ரசல் நம்பினார்.

அவர் தத்துவவாதியின் வேலை என்பது, உலகைப் பற்றிய மிகப் பொதுவான அறுதியுரைகள் எனவும், குழப்பத்தை இல்லாமல் செய்வது எனவும் நினைத்தார்.

குறிப்பாக அவர் மெடாபிசிக்ஸ் என்பதின் மிகைகளைத் தடுக்க விரும்பினார். ரசல் ஒக்கமின் வில்லியத்தின் கொள்கையான தேவைக்கற்ற பாகுபாடுகளை நிராகரித்தல் என்பதை தன் பாகுபாட்டியலின் மையமாக உள்வாங்கினார்.

## ரசலின் அறிவுக்கோட்பாடு

ரசலின் அறிவுக்கோட்பாடு பல மாற்றங்களை அடைந்தது.

முதலில் அவர் நவ–ஹெகல்வாதத்தை கைவிட்டவுடன், வாழ்நாள் முழுவதும் தத்துவ நிஜத்துவவாதி ஆக இருந்தார்,

அதாவது நன் நேரடி அனுபவம் அறிவை சேர்த்துக் கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவரது சில கருத்துகள் தாக்கத்தை இழந்து விட்டாலும், அவர் சொன்ன அறிவு பெறும் முறையின் வேற்றுமைகள் தத்துவ உலகத்தில் செல்வாக்கு வைத்துள்ளன.

அவையாவன பிரத்யக்சத்தின் அடிப்படை அறிவு, மற்றும் விவரண அடிப்படை அறிவு ஆகும். சில வேளைகளில் நாம், நமது இந்திரியங்களின் மூல தரவு,

அதாவது நிற பார்வைகள், சப்தங்கள், இப்படிப்படவை மட்டுமே நமக்கு பிரத்யக்சமாகும்; ஆனால் மற்றவை எல்லாம் அதாவது, இந்த இந்திரிய தரவுகள் சுட்டிக்காட்டும் அல்லது அவற்றினால் காரணவழியாக அடையும் தூலப் பொருள்கள், அதாவது வருணனை வழி அறிவு நேரடியாகத் தெரிவதில்லை., என ரசல் நினைத்தார். இந்த வேற்றுமை பரந்த உபயோகத்தை பெற்று இருக்கிறது.

பிற்கால தத்துவத்தில், ரசல் ஒருவித ''சார்பற்ற ஒருபொருண்மை வாதம்'' (neutral monism) என்பதில் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினார் .

அதாவது பொருள் உலகம், மற்றும் மன உலகம் இவற்றின் வித்தியாசங்கள் நியதியற்றவை,

ஆனால் இரண்டையும் சார்பற்ற பண்பு ஆக மற்றலாம். இக்கருத்தை முதலில் அமெரிக்க தத்துவவாதி/மனோதத்துவவாதி வில்லியம் ஜேம்சும், அதன் முன்னால் ரசலால் மிகவும் பாராட்டப்பட்ட பருச் ஸ்பிநோசாவும் வெளியிட்டனர்.

ஜேம்சின் “தூய அனுபவம்” என்பதற்குப் பதிலாக, ரசல் நம் நோக்கங்களின் முதல் நிலைகளை ‘சம்பவங்கள்‘ என்றார் – அது அவருடைய பழைய ஆசான் ஒயிட்ஹெட்டின் ”செய்முறை தத்துவம்” (process philosophy) கருத்தை ஒட்டி இருக்கிறது.

### வேதாத்திரியத்தின் அறிவுத் தத்துவம்

வேதாத்திரியத்தின் தத்துவச் சிந்தகைள் அனைத்திலும்–அறிவுத் தத்துவம்–அடிப்படையாகக் இருப்பதைக் காணலாம்

மனிதனுக்கு– ஆறாவது அறிவு உண்டு என்பதும், இறைவெளியையும், அதன் உள்ளாற்றலான அறிவையும். அறிவின் புற இயக்கமான மனத்தையும்– அறியத்தக்க அறிவுதான்–ஆறாவது அறிவு என்பது –வேதாத்திரியாரின் கருத்தாகும்

“அறிவின் தத்துவமதை ஆராய்ந்தேன். காந்த
அலை இயக்கமே அன்றி வேறு இல்லை !
சிறிதுபெரிதாய் அமைந்த குழாய்கள் ஊடே
சென்று சுழன்றே இயங்கும் இரத்தவேகம்,
எறிகின்ற தொடர்காந்தம் உடலில் மீறி,
எழும் சப்தம், சுவை, மணம், ஊறுணர்ச்சி யாயும்
பொறிபுலன்கள் கூடுதற்கு ஏற்றவாறு
புத்தி நுட்பமாய் இருக்கும் விதமும் கண்டேன்.” (ஞாக.1186)

அறிவு என்பது–ஒரு இயக்க ஒழுங்கு என்றும், எங்கும் நிறைந்திருக்கின்ற–ஒரு மகோன்னதமான சக்தி வேகத்தை ஒழுங்குபடுத்தி– முறையாக இயங்கச் செய்யும்–ஓர் அற்பதமான ஆற்றல்தான் அறிவு என்றும் –மகரிஷி குறிப்பிடுகின்றார்.

## அறிவியல் தத்துவம்

ரசல் தான் தன்னுடைய தத்துவ வழியைப் பற்றி திடநம்பிக்கை வைக்கிறார் , ஆனால் அவருடைய தத்துவ முடிவுகள் பற்றி அவ்வளவு திட நம்பிக்கை இல்லை எனவும் அறுதியிட்டார்.

ரசல், விஞ்ஞான முறையில் விசுவாசம் வைத்தாலும், விஞ்ஞானத்தினால் தற்காலிக பதில்களைத்தான் அடைய முடிகிறது.

விஞ்ஞானத்தினால் பெரிய அங்க ஒற்றுமைகளை கண்டுபிடிக்கும் முயற்சிகள் பயன் தராது எனவும் நம்பினார்.. ரசலின் தத்துவத்திலும் அது உண்மை என்றார். விஞ்ஞானம், தத்துவம் இரண்டின் முடிவும், இலக்கும் உண்மையை புரிதல் ஆகும், முன்னுரைப்பது மட்டும் அல்ல என ரசல் கூறினார்.

விஞ்ஞானத்தின் தத்துவம் ஒரு விசேஷ துறையாவதற்கு ரசலின் பணி வித்திட்டது. விஞ்ஞானம் பற்றிய ரசலின் கருத்துகள் பெரும்பான்மையாக வெளியிடப்பட்டது.

அவரால் 1914 ல் எழுதப்பட்ட "தத்துவத்தில் விஞ்ஞான முறையின் களமாக நம் புற உலகத்தின் அறிவு" என்ற நூலில்தான். மேலும் அந்நூல் தருக்க பாசிடிவிசவாதிகளை பெரிய அளவில் ஆட்டம் காட்டியது.

ரசல், பிரத்தியட்ச வழியில் தெரியும் நம் மூளையின் உள்குணம் தவிர, பௌதீக உலகத்தை, நுண்புல அமைப்பில்தான் தெரிந்து கொள்ள முடியும் என்றார்.

நோக்கமுடையவை, நோக்கமற்றவை இவற்றின் மிகச்சரியான ஒரே சமய ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டு, நோக்கங்களும் தூல உலகத்தில் நாம் நேராக அறியும் உள்குணத்தின் மீதான ஒரு பகுதி ஆகும் என்று ரசல் கூறினார்.

ரசல் "அணுக்களின் அகரம்" The ABC of Atoms 1923 , "சார்பியலின் அகரம்" The ABC of Relativity (1925), உள்ளிட்ட பல விஞ்ஞான நூல்களை எழுதினார்.

# சமயமும் இறையியலும்

ரசல் மதம் என்பது மூடநம்பிக்கை என அறுதியிட்டார்.

சில நல்ல விளைவுகள் இருந்தாலும், மொத்தத்தில் மதம் மனிதர்களுக்கு தீங்குதான் செய்கிறது.

மதமும், மத நோக்கும் அறிவு வளர்ச்சியை தடுப்பவை. அச்சத்தையும், சுதந்திரமின்மையும் வளர்க்கிறது. அதனால் போர், துன்பங்கள், அடக்குமுறைகள் ஆகியவற்றிற்கு பொறுப்பாகிறது.

1949 ல் "நான் நாத்திகனா இறை ஐயம் கொண்டவனா" என்ற உரையில்,

நான் "தத்துவ அளவில் அல்லது தத்துவ அவையினர் முன்னிலையில் பேசுவதானால், என்னை இறை ஐயம் கொண்டவன் என வருணிக்க வேண்டும்.

ஏனெனில் ஆணித்தரமாக கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்பதை உறுப்படுத்துவதற்கு நிரூபணங்கள் இல்லை. அதே சமயம் சாதாரண மனிதனுக்கு என் எண்ணத்தை சொல்வதானால், என்னை நாத்திகன் என வருணிக்க வேண்டும்'' என்று கூறினார். மேலும்,

''நான் மரணத்திற்கு பின் வாழ்க்கை இல்லை என்பதை உறுதியாக நம்பினாலும், இரு வருடங்கள் கழித்து (1896ல்), கடவுள் உண்டு என நம்பினேன்,

ஏனெனில் ''முதல் காரணி'' வாதம் அழிக்க முடியாததாக தோன்றியது.

18ம் வயதில் கேம்ப்ரிட்ஜ் செல்லும் முன்பு, மில்லின் சுயசரிதையை படித்தேன். அதில் அவர் தந்தை 'என்னை சிருட்டித்தவர் யார்' என்ற கேள்விக்கு பதில் இல்லை.

ஏனெனில் அது 'கடவுளை யார் சிருட்டித்தது' என்ற கேள்விக்கு அழைத்துச் செல்லும் எனச் சொல்வதாக படித்தேன். அதிலிருந்து ''முதல் காரணி'' வாதத்தை கைவிட்டு, நாத்திகனானேன். (''பெர்ட்ரண்டு ரசல் – சுயசரிதை – ப 36'')

மேலும்,

''தருக்கரீதியில் உலகம் 5 நிமிடம் முன்னால்தான் எல்லா இனங்களுடன் தோன்றிற்று, அதில் மக்களும் இல்லாததொரு பழையகாலத்தை ''ஞாபகம்'' வைத்துள்ளனர் என்று சொல்ல தடயம் ஒன்றும் இல்லை.

தருக்க ரீதியில் பல காலங்களில் நடந்த சம்பவங்களுக்கு ஒரு தொடர்பும் இல்லை.

இப்பொழுதோ, எதிர்காலத்திலோ நடக்கக் கூடியது அல்லது உலகம் 5 நிமிடம் முன்னாடிதான் ஆக்கப் பட்டது என்ற முன்கோளை, பொய் என நிரூபிக்க முடியாது'' என்றும் கூறினார்.

(பெர்ட்ரண்டு ரசல் – ''மூளையின் பகுப்பாய்வு'' 1921 ப 159–160).

பால்ய பருவத்தில் ரசல் நிரந்தர உண்மைகளுக்காக ஏங்கினார், அவருடைய புகழ்பெற்ற கட்டுரையான ''சுதந்திர மனிதனின் துதி'', என்பதில் இயற்கைக்கு புறம்பான, அமானுஷ்ய நம்பிக்கைகளை வெறுத்தாலும், நான் வாழ்க்கையின் ஆழ்ந்த பொருளைப் பற்றி ஏக்கம் கொண்டுள்ளதாக ஒத்துக் கொண்டார்.

ரசலுடைய மதம் பற்றிய கருத்துகள் 'நான் ஏன் கிருஸ்துவன் இல்லை' 'மதம், இத்தியாதி ,பற்றிய இதர கட்டுரைகள்' என்ற இரு நூல்களில் காணப்படுகின்றன.

''நான் ஏன் கிருஸ்துவன் இல்லை'' என்பது பற்றி 6 மார்ச் 1927 ல் பாட்டர்சீ நகர மாளிகையில், தேசீய மதசார்பற்ற சங்கத்தின் தெற்கு லண்டன் கிளையில் உரையாற்றினார்,

ஒரு வருடம் கழித்து அது துண்டுப்பிரசுரமாக வெளிவந்தது. அதில் கடவுள் நம்பிக்கையின் பல வாதங்களை அலசி, கிறிஸ்தவ இறையியல் பற்றியும் பேசுகிறார். அவருடைய முடிவு,

''மதம், முக்கியமாக அச்சத்தின் மேல் உண்டாக்கப்பட்டது என நினைக்கிறேன். அது ஒரு பகுதி நமக்கு தெரியாதவற்றைப் பற்றிய பீதி, மற்றொரு பகுதி நம் பக்கத்தில் ஒரு அண்ணன் இருந்து நம் துக்கங்களிலும் வாழ்க்கை கஷ்டகாலங்களிலும், சச்சரவுகளிலும் ஆதரவு கொடுப்பதாக ஒரு உணர்வு.......

ஒரு நல்ல உலகம், அறிவு, கருணை, திடமனம் இவற்றை வேண்டுகிறது. அது கடந்த காலத்தின் மீது பச்சாதாபமுள்ள புலம்பல்களையும், அறிவற்றவர்கள் சொன்ன வார்த்தைகளால் சிறைப்படுவதையும் வேண்டவில்லை'' என்பதாகும்.

## வேதாத்திரியத்தில் மதம்

''அறிவோடு. சுகாதாரம், பொருளா தாரம்,
அரசியல், விஞ்ஞானம் அனைத்தும் சேர்த்து
நெறியோடு இயற்கையின் இயல் பறிந்து,
நேரிடும் சந்தர்ப்பங்கள் காலம் ஒக்கச்
சிறிதுபெரி தாய்த் தோன்றும் வாழ்க்கைச் சிக்கல்,
சிந்தனையால் தீர்க்கும்பல உட் கருத்துச்
செறிவுள்ள திட்டங்கள் எல்லாம் ஒன்றாய்ச்
சேர்ந்த ஒரு தொகுப்பன்றோ மத ஒழுக்கம்.'' (ஞா.க.பா.517)

## வேதாத்திரியத்தின் கடவுள் தத்துவம்

''இறை'' என்பது –தெய்வ நிலையைக் குறிக்கும் ஒரு சிறப்புச் சொல். ''தெய்வம்'' என்பது – அரூபமான பேராதராச் சக்தி''.

மாபெரும் பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும்– மூலமானதும் புலன்களைக் கொண்டு –வேகம், காலம், பருமன், தூரம் என்ற– நான்கு அளவைகளாலும் –கணிக்க முடியாததும், அறிவு புலன்கள் மூலமாகத் தேடும்போது இல்லையென்றும்– தனது ஆறாவது நிலையின்

உயர்விலே ஆராயும்போது– உண்டு என்றும்– உணரக் கூடியதுமான– உண்மை நிலை எதுவோ– அதுவே தெய்வம்– என்று வழங்கப்படுகிறது.

இயற்கை என்பது– எல்லா ஆற்றல்களுக்கும் –அடிப்படையான மூல ஆற்றல்– ஒருங்கிணைப்புப் பேராற்றல்.

"கடவுள் என்று சொல்லிவிட்டான் கருவறிந்தோன்,
கருத்தறியான் ஊன்றிஇதைக் காணவில்லை!
கட–உள் என்ற ஆக்கினையின் குறிப்பைமாற்றி,
கண்டறிந்த நிலைக்கே அப்பெயரைக் கொண்டான்
கட–உள் என்ற இருசொல்லை ஒன்றாய்ககூட்டிக்
கடவுள் என்றே சொல்லிச்சொல்லி வழக்கமாச்சு!
கட–உள் என்றுமனிதன்ஒரு குறிப்புத் தந்தான்.
எடவுள் எங்கே ? என்றுபலர் தேடுகின்றார்." (ஞா.க.1121)

## வேதாத்திரியத்தில் சமய விளக்கம்

"சமயம் என்பது சம இயம் இணைந்த சொல்
சமயம் உயிர்கள்பால் நேர்நிறை உணர்வுதான்
சமயக் கருத்துதான் மதங்களின் உயிரால்
சமயம் என்றும நாம் மதங்கைளை சொல்லுவோம்." (ஞாக.பா.499)

# அமைதிவாதம், யுத்தம், அணுகுண்டுகள்.

ரசல் எப்பொழுதும் முழு அமைதிவாதி அல்ல. அவர் குறிப்பிட்ட போர்களை நாகரீகத்தின் எதிரி, அதனால் நன்நெறி அற்றது என்று சொல்லி எதிர்த்தார்.

அதே சமயம் 1915 ல் அவர் எழுதிய கட்டுரையான "போரின் நன்நெறி இல், போர்களை நாகரீகத்தை முன்னேற்றுபவை என்று ஆதாரப்படுத்தினார்.

ரசலின் முதலாவது உலக யுத்த எதிர்ப்பு நடவடிக்கைகள், அவருக்கு அபராதம், சிறைவாசம், பிரித்தனுக்குள் பிரயாணத்தின் கட்டுப்பாடுகள், டிரினிடி காலேஜில் ஆசிரிய பதவி இழப்பு ஆகியவற்றை கொண்டு வந்தன.

6 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்த பின்பு விடுதலை கிடைத்தாலும், 1 வருடம் சிறை அதிகாரிகள் மேற்பார்வையில் இருந்தார்.

இரண்டாம் உலகப் போர் துவங்கும் வரை பிரித்தானிய அரசின் ஹிட்லரை சாந்தப்படுத்தும் கொள்கையை ஆதரித்தார், ஆனால் 1940 ன் போது, ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்கு ஹிட்லரை தோற்கடிக்க வேண்டும் என்றார்.

அணுகுண்டின் முதல் பிரயோகத்தில் இருந்து, அதை எப்பொழுதும் எதிர்த்தார். 1955 இல், ரசல் ரசல்–ஐன்ஸ்டைன் பிரகடனத்தை வெளியிட்டார்.

அது ஐன்ஸ்டைன், மற்றும் 9 அறிவு ஜீவிகளால் கையொப்பம் இடப்பட்டது. அது விஞ்ஞானம், உலக விவகாரங்கள் மீதான முதல் பக்வாஷ் மகாநாட்டை ஏற்படுத்தியது.

1958ல், ரசல் அணுகுண்டு கைவிடல் இயக்கத்தின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2 வருடங்கள் கழித்து, ஒத்துழையாமையை அது ஆதரிக்கவில்லை என்பதால், அதிலிருந்து ராஜிநாமா செய்தார். செப்டம்பர் 1961ல், ஒரு வாரம் ஒத்துழையாமையை தூண்டியதால் சிறைக்கு அனுப்பப்பட்டார்,

பாதுகாப்பு அமைச்சகம் முன் அவர் ‘அணுஆயுதத்தை தடையிடு‘ என்ற ஆர்பாட்டம் செய்ததால் ஏற்பட்டாலும், அவரது வயது கருதி சிறையில் அடைக்கப்படவில்லை.

கியூபா எரிகணை நெருக்கடியின் போது, ரசல் அ.நா. ஜனாதிபதி ஜான் எஃப் கென்னடி, நிகிதா குருஸ்சாவ், ஐ.நா.வின் ஊதாண்ட், பிரித்தானிய பிரதமர் ஹரால்ட் மக்மில்லன் ஆகியோருக்கு தந்திகள் அனுப்பினார்.

கென்னெடியை அவர் பெரும் விமரிசனம் செய்து கென்னெடி ஹிட்லரைப் பார்க்கிலும் அபாயகரமானவர் என்றார். குருஸ்சாவ் ஒரு பெரும் மடலில் ரசலுக்குப் பதில் அளித்தார், அது சோவியத் நாட்டிலும் பிரசுரிக்கப் பட்டது.

மானுடத்திற்கு அணு ஆயுதங்களால் வரும் ஆபத்தை கண்டு கவலையுற்று, 1960ல், ஐன்ஸ்டைன், ராபர்ட் ஆப்பன்ஹைமர், ஜோசப் ரிட்பிளாட், மற்றும் இதர புகழ் பெற்ற விஞ்ஞானிகளுடன் சேர்ந்து, உலக கலை விஞ்ஞான அகாதமியை நிறுவினார்.

பெர்ட்ரண்ட் ரசல் அமைதி கட்டளை மற்றும் அதன் பிரசுரக் கையேடு ''ஸ்போக்ஸ்மேன் புக்ஸ்'' 1963ல் ரசலின் உலக அமைதி, மனித உரிமை, சமூக நீதிப் பணிகளை முன்னேற்றிச் செல்ல தொடங்கியது. 1963 முதல் வியட்நாமில் அமெரிக்காவின் உள்ளீட்டை எதிர்க்கத் தொடங்கினார்.

1966 இளவேனிற்காலத்தில், 'வியட்நாம் போர் குற்றங்கள்' என்பதை எழுதி முடித்தார். பிறகு பிரெஞ்சு தத்துவவாதி ஜான் பால் சார்த்தரேயுடன் ரசல் தீர்ப்பாயம் என்ற சர்வதேச போர் குற்ற தீர்ப்பாயத்தை அமைத்தார்.

மேலும் அமெரிக்க அரசாங்கத்தின் கென்னடி கொலை அறிக்கையை ''கொலை மேல் 16 கேள்விகள் 1964 '' என்ற கட்டுரை வழியாக கண்டித்தார்.

ரசல் தன் வரலாற்று நூலை மூன்று தொகுதிகளாக 1967,1968,1969 களில் வெளியிட்டார். உடல்நிலை தளர்ந்தாலும், இறுதி வரை தெளிவான மனத்துடனும், சிந்தனையுடனும் இருந்தார்.

23 நவம்பர் 1969 அன்று தடைம்ஸ் செய்தித்தாளுக்கு செகோஸ்லாவாக்கியாவில் நடைபெற இருக்கும் போலிக் குற்றச்சாட்டு நீதிமன்ற வழக்குகள் மிகவும் கவலை தருபவையாக உள்ளன என எழுதினார். அதே மாதம், ஐக்கிய நாடுகள் பொதுச் செயளாளர் ஊதாண்டுவுக்கு, அமெரிக்கா வியட்நாமில் செய்த சித்திரவதை, இன அழிப்பு பற்றி ஒரு சர்வதேச குற்ற விசாரணை மன்றம் ஏற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அடுத்த மாதம், சோவியத் பிரதமர் அலெக்சி கோசிஜனிடம், எழுத்தாளர்கள் சங்கத்திலிருந்து அலெக்சாண்டர் சோல்ஷனிஸ்தனை வெளியேற்றுவதற்குக் கண்டனம் தெரிவித்தார்.

31, ஜனவரி 1970 அன்று ரசல் இஸ்ரேலின் பாலஸ்தீனிய தரை ஆக்கிரமிப்பைக் கண்டித்து, இஸ்ரேல் ஆக்கிரமித்த பாலஸ்தீனிய நிலங்களில் இருந்து விலகி வரவேண்டும் என அறிக்கை வெளியிட்டார். அதுதான் ரசலின் வாழ்க்கையிலேயே இடம் பெற்ற கடைசி அரசியல் நடவடிக்கையாகும்.

ரசல் இன்ப்ளுவென்சா சுரத்தினால், வேல்சில் உள்ள தன் வீட்டில் 2ம் பிப்ரவரி, 1970ல், இறந்தார்.

அவரின் விருப்பப்படி அவர் உடல் மதச் சடங்குகள் எதுவும் இல்லாமல் தகனம் செய்யப்பட்டு, சாம்பல் வேல்ஸ் மலைகளின் மீது தெளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் வேதாத்திரி மகரிஷி ஆற்றிய உரை

(9 சனவரி, 1975) (ஆங்கில உரையிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.)

அன்பான நண்பர்களே,

ஆன்மீக மேம்பாடு பற்றிக் கேட்பது என்ற நல்ல நோக்கத்தோடு இங்கு குழுமியிருக்கும் உங்களனைவரையும் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆன்மீக அறிவு என்பது வாழ்க்கையை முழுமையாக்குவதற்கும், ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும், உலக மக்கள் அனைவரது வாழ்விலும் அமைதியைப் பராமரிப்பதற்கும், மிக அவசியமான ஒன்றாகும்.

மிகப் பெரிய நிறுவனமான ஐக்கியநாடுகள் சபை இதற்காகத் தொடங்கப்பட்டது. மனிதகுலத்தில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ஐ.நா. சபை இயங்கி வருகின்றது.

அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் அமைதியைக் கொண்டு வருவதற்கு ஐ.நா. சபை மிகக் கடினமாக உழைக்கின்றது.

எல்லா நாட்டுப் பிரதிநிதிகளையும் ஒருங்கிணைத்து உலக அமைதியைப் பற்றி எண்ணுவதற்கான ஒரு நல்ல திட்டமே ஐக்கிய நாடுகள் சபை. ஆபத்தான அணு ஆயுதங்களுக்கு எதிராக மனித இனம் உயிர் வாழ்வதற்கான ஒரே நம்பிக்கை உலக சமாதானமாகும்.

தத்துவ ஞானத்தில் சிறந்தவர்களும், உலகளாவிய எண்ணங்களில் சிறந்த அறிஞர்களும் ஐக்கிய நாடுகள் சபை ஆற்றும் நற்பணிகளைப் பாராட்டுகிறார்கள்.

## ஆன்மீக அறிவு மேம்பாடு

இங்கே, நான் உலக அமைதிக்கு மிக முக்கியமான மற்றொன்றையும் குறிப்பிட வேண்டும்.. அது மனித இனம் ஆன்மீக அறிவில் மேம்பாடு அடைவதாகும்.

உண்மையிலேயே, அமைதியான வாழ்க்கைக்குப் பொருளாதார வசதிகள் அவசியமானவை.

ஆனால் ஆன்மீக அறிவு இல்லாமல், பொருள் வசதிகள் மட்டும் வாழ்க்கையில் திருப்தியையும், அமைதியையும் கொண்டு வர முடியாது. இங்கு ஓர் எடுத்துக்காட்டு தருகிறேன்.

உணவு, உறைவிடம், உடை ஆகியவை உலகியல் வாழ்வில் அவசியமான பொருட்கள். உலகையும் இம்மூன்று அவசியமான பொருட்களின் சேமிப்பையும் அகக்காட்சியாகப் பாருங்கள்.

துணிகள் உற்பத்தியை உலகம் இன்று உடனடியாக நிறுத்தி விட்டாலும் இப்போது நாம் உற்பத்தி செய்து சேமித்து வைத்துள்ள துணிகள் எல்லா மக்களுக்கும் இரண்டு ஆண்டுகளுக்குப் போதுமானதாக உள்ளன.

இதுபோல், சேமித்து வைத்துள்ள உணவு ஓராண்டிக்குப் போதுமானதாக உள்ளது. உறைவிடமும் ஒருவருக்குத் தேவையான பரப்பளவிற்கு எடுத்துக் கொண்டால், யாருக்கும் உலகில் வீடு இல்லை என்று தவிக்க வேண்டியதில்லை.

சில மனிதர்களிடமும் சில நாடுகளிலும் இந்த வசதிகள் குறைவாக இருக்கலாம். மற்ற மனிதர்களிடமும் நாடுகளிடமும் இவை உபரியாக உள்ளன.

ஆன்மீக அறிவின் மேம்பாடுதான் இவ்வாழ்க்கைத் தேவைகளை உலக மக்களுக்கு அன்பு, மதிப்பு, பொறுப்பு இவற்றுடன் பகிர்ந்து கொள்ள வழிவகுக்கின்றது.

ஆன்மீக வளர்ச்சியினால் ஒரு மனிதனிடம் இயற்கையாக மலர்கின்ற அன்பு மற்ற மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வைக்கிறது.

அன்பு மற்றவரது தேவைகளையும் ஆசைகளையும் மதிக்கின்றது. திருப்திகரமான வாழ்க்கைக்கு, மற்றவர் எடுக்கின்ற முயற்சிகளுக்கு அன்பு உதவுகிறது.

ஒருவரது அன்பு தனது சொந்த உடலுழைப்பையும், பொருளாதார வசதியையும், அறிவாற்றலையும் மற்றவர்களுக்குத் தந்து, தியாக உணர்வுடன் விரும்பி வாழ உதவுகிறது.

அரசியல், பொருளாதார வழிகளில் ஒருவரது வாழ்க்கை வசதிகளை அதிகப்படுத்த முயற்சிகள் எடுப்பதோடு, மனித சமுதாயத்தில் ஆன்மீக முன்னேற்றமும் ஏற்பட ஒரு வாய்ப்பு தர வேண்டும்.

ஏனெனில், தகுதியுடைய மக்கள் அனைவரும் ஆன்மீக அறிவில் குறிப்பிட்ட காலத்தில் மேம்பாடு அடைவர்.

ஆன்மீக மேம்பாடு என்றால் என்ன ? என்பதைக் கவனிப்போம். வாழ்கின்ற முறையில் மனம்தான் மையப் பொருளாக உள்ளது. சிறப்பான இயக்கமாக உள்ளது.

ஒருவன் மனதின் மதிப்பையும், அதன் அற்புதமான செயலையும் புரிந்து கொள்ளும்போது, அவனால் வெற்றிகரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்க்கையை அனுபவிக்க முடிகிறது.

## உயிரும் மனமும்

உயிரின் படர்க்கை நிலையே மனம் என்பதால், முதலில் உயிரைப் பற்றி நன்கு தெரிந்து கொள்வோம்.

ஏனெனில், உயிர்தான் மனதிற்கு அடிப்படை. உயிரும் மனமும் மனிதனின் அறிவாட்சித் தரத்தில் (ஆளுமைத்திறனில்) இரகசியமான அம்சங்கள். ஐம்புலன்கள் மூலம் பெறும் அறிவைக் கொண்டு இவற்றைப் புரிந்து கொள்ள முடியாது.

ஓர் ஒழுங்குமுறையான மனப்பயிற்சியின் மூலம்தான் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

மனம் அதனுடைய மூலத்தைத் தேடுவதும், உயிர், மனம் இவ்விரண்டின் இருப்பையும், அவற்றின் இயக்கத்தையும், இவை ஒவ்வொன்றிற்கும் இடையே உள்ள தொடர்பையும் புரிந்து கொள்ள மனப்பயிற்சி உதவுகிறது. இத்தகைய மனப்பயிற்சிதான் ‘தவம்’ அல்லது ‘எளியமுறை குண்டலினி யோகம்’ எனப்படுகிறது.

குண்டலினி என்ற பெயர் இறையாற்றலைக் குறிக்கிறது. இது பிரபஞ்சத்திலுள்ள எல்லா ஆற்றல்களுக்கும் அடிப்படையான உயர்ந்த பேராற்றல்.

உயிரினங்களிலுள்ள உயிராற்றல் இறைநிலையின் பேராற்றலின் ஒரு பகுதிதான்.

இறைநிலையின் பேராற்றல்தான் பிரபஞ்சத்தின் இயக்கங்களை வழி நடத்துகிறது.

உண்மையிலேயே அடிப்படையான விண்துகள்களின் தொகுப்புதான் வெவ்வேறு திணிவுகளுடன் விளங்கும்போது தோற்றப் பொருட்களாக அமைகின்றன.

எனவே, விண்துகள் (அல்லது உயிர்த்துகள்) தான் பௌதிகத் தோற்றப் பொருட்கள் உற்பத்திற்கு அடிப்படையான தத்தவமாகவும், மனம் மன இயக்கத்திற்கு அடிப்படையானதாகவும் விளங்குகின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

விண்துகள், அதன் இருப்பு, இயக்கம், விளைவு இவற்றை அறிந்து உணர்ந்து கொள்ளுதலே ‘ஆன்மீக அறிவு’ எனப்படும்.

இந்த அறிவுதான் எல்லா விஞ்ஞானங்களுக்கும் விஞ்ஞானம் ஆகும். பொருளாதார அறிவோடு மட்டும் வாழுதல் என்பது மனதிற்கு ஒருபுறம் பாரமாக இருக்கும். அதைச் சரிசமன் செய்வதற்கு ஆன்மீக அறிவு கட்டாயம் தேவை.

## உயிரை உணர்தல்

நமக்குள் உயிராற்றலாக இயங்குகின்ற உயிரை எப்படி உணர்ந்து கொள்வது ? உயிர்த்துகள் உடல் முழுவதும் ஊடுருவிச் சென்றாலும் பரு உடலின் நடுப்பகுதியில் ஓர் இயக்க மையம் உயிருக்கு அமைகின்றது.

பொதுவாக, உயிரின் இயக்க மையம் என்பது முதுகுத்தண்டின் அடியில் அமைந்து உள்ளது. இதை 'மூலாதாரம்' என்று முந்தைய யோகியர்கள் அழைக்கின்றனர்.

இந்த உயிரியக்க மையத்தை மூலாதாரத்திலிருந்து ஆக்கினைச் சக்கரம் என்ற புருவ மத்திக்கு மாற்றி அமைத்தாலன்றி, உயிரின் இருப்பையும் இயக்க நிலையையும் மனதால் உணர முடியாது.

முற்கால யோகிகள் மூச்சுப் பயிற்சியின் மூலமாகவும், மந்திரங்களை உச்சரிப்பதன் மூலமாகவும் இந்த உயிர் மையத்தை மாற்ற முயற்சி செய்தனர்.

ஆனால், இவ்விரண்டு முறைகளும் கடினமானவை. அதிகக் காலம் எடுத்துக் கொள்பவை. சக்தியை மேலே கொண்டு வருவதற்குப் பல ஆண்டுகள் பயிற்சி செய்ய வேண்டும்.

இதற்கிடையில் இந்த ஆற்றலை மேலே கொண்டு வரும்போது, வழியில் தடை ஏற்பட்டால், உயிருணர்வு பெறுபவர் சில தீய விளைவுக்கான பயன்களை அனுபவிக்க நேரிடும். எனவே, குடும்ப வாழ்வில் ஈடுபட்டோர் இந்த யோகத்தின் நன்மைகளை உணர முடியாமல் போயிற்று.

குருவானவர் குண்டலினி சக்தியின் இயக்க மையத்தை மாற்றி, நிலை நிறுத்தியவுடன் கற்பவர் உயிர்ச்சக்தியின் அழுத்தத்தைப் புருவமத்தியில் மனதால் கவனிக்க வேண்டும்.

இந்த வழிமுறையே 'தவம்' எனப்படும். உயிராற்றலை மனதால் கவனிக்கும்போது மனதின் விழிப்புநிலை முன்னேற்றம் அடைகிறது.

உயிராற்றல் வீணாகச் செலவாவதைச் சேமிக்கிறது. மனதில் உறுதியையும் அமைதியையும் அதிகப்படுத்துகிறது.

மனம் அதன் அடிப்படையான உயிரைக் கவனிக்கின்றபோது உயிரும் மனமும் இருப்பதையும் இயங்குவதையும் இவற்றிற்கு இடையே உள்ள தொடர்பையும் செய்முறை பயிற்சியின் அனுபவத்தால் நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது.

தவத்தில் தெளிவாக இறைநிலையை உணர்ந்த குருவின் மூலம் ஆன்மீக சாதனை கற்பவரின் உயிராற்றலை, குண்டலினி சக்தியை மூலாதாரத்திலிருந்து ஆக்கினை மையத்திற்குக் கொண்டு வந்து, நிலை நிறுத்தி, உணர வைப்பது 'தீட்சை' எனப்படும். இது ஆன்மீக சாதனைப் பயிற்சியில் முதல்படி. மேலும் சில பயிற்சிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றையும் கற்றுப் பழக வேண்டும்.

உலக சமுதாய சேவா சங்கத்தின் உறுப்பினர்களான (World Community Service Center WCSC) நாங்கள் இந்தக் குண்டலினி தவத்தை 'எளியமுறைக் குண்டலினி யோகம்' (Simplified Kundalini Yoga SKY) என்று அழைக்கிறோம்.

எளியமுறைக் குண்டலினி யோகம் (SKY)

இது நான்கு பயிற்சி முறைகளை உள்ளடக்கியது. அவை:

1) அகத்தவம் (Meditation)
2) அகத்தாய்வு (Introspection)
3) குணநலப்பேறு (Sublimation)
4) முழுமைப்பேறு (Perfection)

அகத்தவம் மன உறுதியையும் மன அமைதியையும் பெருக்குகிறது.

அகத்தாய்வு அறிவு ஒளி வீசச் செய்கிறது. ஒருவரது வாழ்க்கையில் ஒளி விளக்காக வழி காட்டுகிறது.

குணநலப்பேறு ஒருவரது பழக்கங்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்தி, நல்ல குணங்களை உண்டாக்குகின்றது.

முழுமைப்பேறு என்பது ஆன்மீக மேம்பாட்டில் சிறப்பாகக் கிடைத்த கனி.

இந்த எளியமுறைக் குண்டலினியோகம் முழுவதையும் பத்து (10) வகுப்புகளில் (வகுப்பிற்கு ஒரு மணி நேரம் என்ற முறையில்) கற்றுக் கொள்ள முடியும்.

அன்புள்ள நண்பர்களே,

மனிதன் பழக்கத்திற்கும், விளக்கத்திற்கும் இடையே போராடிக் கொண்டிருக்கின்ற விநோதமான உயிரினம். ஒழுங்கான ஆன்மீகப் பயிற்சியின் மூலம் சிந்தனை ஆற்றலை வளர்த்துக் கொண்ட பின்னர்தான், மனிதன் முழுமைப்பேறு என்ற இலட்சியத்தை அடைய முடியும்.

உலக சமுதாய சேவா சங்கத்தின் நோக்கமே ஆன்மீக அறிவை எல்லா நாட்டு மக்களுக்கும் பரப்புவது ஆகும்.

என்னுடைய வாழ்வில் நாற்பது (40) ஆண்டுகள் ஆராய்ச்சி செய்த பிறகு ஆன்மீக அறிவு மட்டுமே தனிமனிதனிடத்திலும் சமுதாயத்திலும் நாடுகளுக்கிடையேயும் அமைதியை விளைவிக்கும் என்பதை நான் கண்டு கொண்டேன்.

ஆன்மீக மேம்பாட்டிற்கு ஒரு பாதுகாப்பான, முழுமையான முறையை நான் வழிவகுத்தேன். அதைத் தகுதியான மனிதர்களுக்குப் போதித்து வருகிறேன்.

அற்புதமான உளப் பயிற்சியில் ஈடுபடுத்திக் கொள்ள விரும்புகின்ற எந்த நண்பருக்கும் என்னுடைய அறிவைப் பகிர்ந்து கொள்ள நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். இச்சொற்களோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

நீங்களனைவரும் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், அமைதி பெற்று, ஓங்கி வாழ்க வளமுடன்'' என வாழ்த்துகிறேன்.

## பொதுவுடைமையும் சமவுடைமையும்

ரசல் முதலில் ''கம்யூனிஸ்டு சோதனை'' என்பதில் பெரும் நம்பிக்கை காட்டினார்.

ஆனால் 1920ல் உருசிய புரட்சியைப் பார்க்க சோவியத் யூனியன் சென்று விளாடிமீர் லெனினை சந்தித்த பின், அங்குள்ள அரசியல் முறையில் நம்பிக்கை இழந்து, திரும்பி வந்தபோது ''போல்ஷவிசம், கோளும் செயல்முறையும்'' என விமர்சன நூல் எழுதினார்.

அவர் ''நான் இந்த சூழலில் மிகவும் சந்தோஷமற்றவனாக உள்ளேன். அதன் பயன்பாட்டுவாதம், அன்பு, அழகு வாழ்க்கை எழுச்சி இவற்றின் மீது ஆர்வமில்லாமை என்னை நசுக்குகிறது''. என்று கூறினார்.

அவர் லெனினை ஒரு மத வெறியர் என்ற கோணத்தில் பார்த்தார். 1922, 1923 பொது தேர்தல்களில் ரசல் தொழிலாளர் கட்சியின் சார்பாக போட்டியிட்டுத் தோற்றுப் போனார்.

அவர் ஸ்டாலினின் அரசை கடுமையாக கண்டித்தார், மார்க்சீயவாதத்தை 'ஒரு சமயக் கோட்பாடு' என கருதினார்.

ரசல் ஜனநாயகம், உலக அரசாங்கம் இவற்றிற்கு ஆதரவு கொடுத்து, 'சோம்பேறித்தனத்தின் புகழ்சி'', ''மனிதனுக்கு எதிர்காலம் உள்ளதா'' போன்ற நூல்களில் சர்வதேச ஜனநாயக அரசாங்கத்தை நிறுவ வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

''உலகத் திருந்தி உலக மக்கள் ஒன்றாய் வாழ''
''அனைத்துலக மக்களும் ஓர் குடும்பமாக''
''மண்ணுகில் புதிய சமுதாயம் தோன்றும்''

''எங்கள் நாடென்றெவரும் பிரித்துச் சொல்ல
இடமில்லா உலகப் பொது ஆட்சி காண்போம்!''
''நாடனைத்தும் இணைந்துலகில் நல்லாட்சி காண்போம்''
''ஓலக ஆட்சியின் கீழ் சுதந்திரமாய் வாழ்வோம்''

என்பது வேதாத்திரியாரின் பரந்து விரிந்த பாருலகக் கண்ணோட்டத்தில் மலர்ந்த புத்தாக்ன ஆட்சிக் கருத்தாகும்.

பாருலகப் பேராட்சியில் பொருளாதாரச் சுபிட்சமும் சமத்துவமும் இன்றியயமையாதவை ஆகும்.

ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வு குறைந்து சரிநிகர் சமச் சமுதாயம் நிறைவாக நிறைய பொதுப் பொருளாதார முறையே சிறந்தது என்பது வேதாத்திரியாரின் கருத்து.

எல்லாரும் எல்லாமும் பெற்று வல்லோராக நல்லோராக வலம் வருகின்ற பொதுமைப் பொருளியலே சிறந்தது என்று பல இடங்களில் பதிவு செய்துள்ளார்கள்.

''பார் முழுதும் பொருள் துறையில் சமநீதி காண்''
''பொருட்களெல்லாம் பொதுவுடமை நாட்டில்''

எனப் பலப்பபல கருத்துக்களை வேதாத்திரியத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

''எங்கெங்கும் உலகினலே பிறப்போர்க்கெல்லாம்
இவ்வுலகம் சொந்தமென்ற உண்மை ஏற்று''

என்று ஒருலகச் சொத்துரிமைப் பற்றி நானில மக்களுக்கு நல்லுரை நல்குகிறார் வேதாத்திரியார்.

பொருளியல் வேறுபாடுகளுக்கும் சமூகச் சீரழிவிற்கும் காரணமான தனியார் சொத்துரிமை தடை செய்யப்பட வேண்டுமென்பதே வேதாத்திரியாரின முடிவு.

தலை சிறந்த கல்வியறிவால் மட்டுமே ஞானம் தலை நிமிர முடியும் என்பது வேதாத்திரியாரின் வேதவாக்காகும்.

அந்த அறிவைப் போதிக்கம் மொழியும், ஆசிரியர்களும் அவனிக்கே பொதுமையாக அமைய வேண்டும் என்பது வேதாத்திரியாரின் புதுமையான கருத்தாகும்.

எல்லாத் துறைகளிலும் கைதேர்ந்த அறிஞர்களின் கைவண்ணம் பதிவுபெற அறிஞர் பொதுமைத் திட்டம் உதவி செய்யும்.

''பொது மொழியால் உலகம் ஒன்றாம்''

''ஞானப் பேறு உலகெங்கும் ஓங்க வேண்டும்''

''அறிவு நலமுடையோர் மேன்மேலும் பெருக !''

போன்ற வேதாத்திரிய வரிகள் மகரிஷியின் மொழி, கல்வி, அறிவு பற்றிய பொதுமைக் கருத்தாக்கத்தினை துலக்குவனவாகும்.

ஒரு சமூகத்தின் நல வாழ்வை நிர்ணயிப்பதில் மிகக் குறிப்பிடத்தக்க பங்கை வகிப்பது பொருளாதார அமைப்பாகும்.

ஒரிடத்தில் பணக்குவிப்பும், மற்றோரிடத்தில் வறுமையும் நிலவும் சமூகத்தின் சீர்நலம் அழிவுறுகிறது.

பணக்காரர், ஏழை என்ற இரண்டு வர்க்கங்களாக மானுடம் பிளவுபடுகிறது. பொருளாதார ஏற்றதாழ்வின் விளைவாக வருவதை பற்றி வேதாத்திரி மகரிஷி குறிப்பிடுகின்றார்.

- 1. பட்டினி 2. நோய் 3. பகை 4. வஞ்சம் 5. பஞ்சமா பாதகம் 6. ஏமாற்றுதல் 7. கடன் 8. இல்வாழ்வில் மனமுறிவு 9. கல்லாமை 10 பிச்சை 11. தேவையற்ற பொருள் தோற்றம் 12. நல்வாழ்விற்கான பொருள் உற்பத்திக குறைவு. ஆகியவற்றை குறிப்பிடுகின்றார்.

சமூக இயங்கியிலின் அடிப்படை, உழைப்பும் உழைப்பாளர்களும் தான். உழைப்புதான் பொருளாதார அமைப்பை நிர்ணயம் செய்யும் ஆற்றலாக இருக்க் வேண்டும்.

உழைப்பு சாராத – உறபத்தி சாராத – வணிகம் என்பது சமூகத்தில் மேலாதிக்கம் பெறுகிறது.

➢ ''சொத்துரிமையும், வணிகமும் ''சமூகத்தின் பதர்கள்'' என்பார் வேதாத்திரி.

''பொருட்களெல்லாம் பொது உடைமையான நாட்டில்
பொது நலத்தில் தன் நலத்தைப் பொருத்தி மக்கள்
பொருள் ஈட்ட ஒற்றுமையாய் உழைப்போர், நல்லோர்
போதனைகள் எளிதாகச் செயலாய் மாறும்
பொருள் இட்டத் தெரியாதோர் இயலாதோர்க்கும்
போதுமென்ற அளவினிலே வசதி கிட்டும்
பொருள் துறையில் பொது முறையைக் கண்டுவிட்டால்
பொதுத் தொண்டே வாழ்வாகும் அறம் தழைக்கும்'' (ஞா.க.19)

பொதுவுடமையால்தான் உலகம் தழைக்கும் என்று ஆணித்தரமாக பதிவு செய்கிறார் வேதாத்திரி மகரிஷி.

# பெண்கள் உரிமைகள்

இளைஞனாக இருக்கும் போது லிபரல் கட்சியின் அங்கத்தினராக இருந்து, பெண் உரிமையைப் பற்றி பேசினார்.

1910ல் வெளியிடப்பட்ட ''பெண் உரிமை எதிர்ப்பு பீதிகள்'' என்னும் பிரசார துண்டுப்பிரசுரத்தில், சில மனிதர்கள் பெண் உரிமையை எதிர்ப்பது ஏனெனில், பெண்களுக்கு தீங்கான வழிகள் செய்யும் சுதந்திரம் கட்டுப்பட்டு விடுமோ என்று அஞ்சுவதால் என்று ரசல் கூறினார்.

1907 தேர்தலில் மக்களைவைக்கு பெண் உரிமை கட்சியின் சார்பாளராக விம்பிள்டன் தொகுதியில் நின்றார், ஆனால் தேர்தெடுக்கப் படவில்லை.

## காம உணர்வுகள் மீது கருத்து

ரசல் 1929 ல் விக்டோரிய காலத்து மனப்பான்மைக்கு எதிராக எழுதிய ''மணமும் நெறியும்'' என்ற நூலில், கணவன் மனைவி உறவு இல்லாத ஆண், பெண் இருவருக்குள் பாலுறவு, அவர்கள் ஒருவரை ஒருவர் காதலித்தால் தப்பில்லை என்று கூறி, 'சோதனை மணம்' அல்லது 'சகா மணம்'

என்று கல்யாணம் முனாலேயே இளம் பெண்களும் ஆண்களும் பால் உறவு கொண்டு மணம் புரியும் நிர்பந்தனையின்றி தங்கள் உறவை சீராக்கம் செய்யலாம் என்பதை ஆதரித்தார்.

அமெரிக்காவில் பெரும் எதிர்ப்பை உண்டாக்கியது. ரசல் மாணவர்களுக்கு பால் கல்வி, மேலும் கருத்தடை உபாயங்கள் கிடைப்பது போன்றவற்றிற்காக வழக்காடினார். மேலும் குழந்தை இல்லை என்றால் சுலப மணரத்தையும் ஆதரித்தார்.

ரசல் ஒருபால் சேர்க்கை சட்ட சீர்திருத்த சங்கத்தின் ஆதரவாளர். 1958ல் மற்ற அறிவுஜீவிகளுடன் டைமெஸ் பத்திரிகைக்கு அனுப்பப்பட்ட, ஒருபால் சேர்க்கை சட்ட மாற்ற கோரிக்கை விடப்பட்ட ஒரு கடிதத்தில் கையொப்பம் இட்டார். பிரித்தனில் 1967 ல் ஓரளவு அச்சட்டம் ஒருபால் சேர்க்கைக்கு சாதகமாக தளர்ந்தது.

## வேதாத்திரியம் தரும் பெண்ணுரிமை வித்தியாசமானது.

பண்டைக் காலத்தில் பாரத நாட்டில் பெண்களுக்குப் பெருமதிப்பு இருந்தது.

பெண்ணை ‘வாழ்க்கைத் துணை’ என்று காட்டினார் வள்ளுவர். ஔவையார் என்ற பெண்பாற் புலவர் தூதுவராகச் சென்றதைப் புறநானூறு காட்டுகிறது. பெண்களைச் சக்தியின் உருவமாகக் கருதியது பாரத நாடே.

பெண்களுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் குறையலாயின.

பெண்களுக்குக் கல்வி அறிவு தேவை இல்லை என்ற நிலை ஏற்பட்டது. பெண்கள் அடிமைபோல் நடத்தப்பட்டனர். பெண்களுக்கு உரிய சமூக அந்தஸ்து (ளடிஉயைட ளவயவரள) மறுக்கப்பட்டது.

மக்கள் தொகையில் பாதியாக விளங்கும் பெண்களுக்குக் கல்வியறிவு இல்லையென்றால் சமூகம் மேம்பட முடியாது என்றுணர்ந்த சான்றோர்கள் பெண் கல்வியை வற்புறுத்தினர்.

பாரதியாருக்கு அடுத்த வந்த வேதாத்திரி பெண்ணித்தின் பெருமையை சிறப்பை மானுடத்திற்கு எளிமையாகப் புரியவைத்து வெற்றியும் கண்டார்.

மகரிஷி தன்னைக் காணவரும் பெண் சீடர்களானாலும் சரி, ஆஸ்ரமத்தில் பணி செய்யும் பெண்களானாலும் சரி, அவர்களைப் பார்க்கும் போது அவர்களுடைய கரங்கள் குவியும்.

என்னடா இது. வாழ்த்த வேண்டிய கைகள் வணங்குகின்றனவே! என்று நோக்குபவர்களுக்கு, ''பெண்கள் இறைவனால் படைக்கப்பட்ட பிரமாக்கள். நான் அவர்களை வணங்கத் தானே வேண்டும்'' என்று உதிர்ப்பார்.

''எனக்கு திருமணம் செய்து கொள்வதில் விருப்பம் இல்லை'' என்று மகரிஷியிடம் தெரிவிக்கும் பெண்களுக்கு, ''பெண்களுக்கு Protection –« Maintenance-ம் வேண்டும். இவை இரண்டும் உனக்கு இருக்கிறதா ?'' என்று கேட்டு சிந்திக்கச் செய்து விடுவார்.

அந்த சமயத்தில் யாரேனும் ஆண்கள் அருகில் இருந்தால், ''இதை அளிக்க வேண்டியது ஆண்களின் கடமை'' என்று உணர்த்துவார்.

பெண்மையின் மதிப்பை உணர்ந்து, டெல்லியில் போய் சதிக்கு ''சதி'' செய்தவர் மகரிஷி.

## பெண்ணின் பெருமை

''பெண் வயிற்றி லுருவாகிப்
பெண் பாலுண்டே வளர்ந்தாய்
பெண்ணின் துணையால் வாழ்கின்றாய்
பெண்ணின் பெருமை உணர்'' (ஞா.க.543)

என்று மகரிஷி பெண்ணின் பெருமையைப் பாடுகின்றார்.

## பெண்கள் பிரம்மாக்களே.!

இந்த உலகத்தில் வாழுகின்ற மக்கள் எல்லோரும் பெண்ணித்தின் அன்பளிப்பு என்றால் அது மிகையாகாது என்பார் மகரிஷி.

மனித இனத்தில் பெண் இன்றி ஆண் கிடையாது. இருவரும் சமம். பெண் என்பவள் ஆணை விட உயர்ந்தவள் ஆவாள்

இறைவானால் கொடுக்கப்பட்ட இனப் பெருக்கம் செய்யும் பேறு பெண்ணினத்திற்கு மட்டுமே உரியதாகும்.

''தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை'' என இறைவனுக்கு இணையாகப் போற்றப்படுகிறாள்.

எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திரு உள்ளமென்ன
எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே
வாழுகின்ற மக்களில் இவ்வளம் அறிந்தோர் எத்தனை பேர்'' (ஞா.க.)

## உண்மையான துறவிகள்.

ஒரு பெண் திருமணமான பிறகு கணவன் வீட்டிற்கு வருகின்றபோது பெற்றோர்களைத் துறக்கிறாா். பிறந்த ஊாினைத் துறக்கிறாா்.

பெற்றோா்கள் வீட்டிலிருக்கக் கூடிய எல்லாப் பொருட்களையும் துறக்கிறாா். இதை எல்லாம் துறந்துவிட்டு கணவன் வீட்டுக்கு வருகிறாள்.

இந்தத் துறைவவிட இதுவரை எந்த இடத்தில் யாா் மேற்கொண்ட துறவு அதிகமாக இருந்து விடமுடியும் ?

அத்தகைய துறவிகளையே எல்லாரும் மனைவிகளாகப் பெற்றிருக்கிறாா்கள்.

கணவா் நலத்திற்காக பெண்கள் அா்ப்பணித்து ஒத்துழைக்கத் தயாராக வந்து விட்டாா்கள். இதை உணா்ந்து கொள்ள வேண்டியது ஆண்களின் கடமை என்கிறாா் மகாிஷி.

## சிறப்பானவா்கள்

அன்பு என்பது ஒன்றிணைத்துக் கொள்ளும் மனப்பான்மையைக் குறிக்கும். அந்த மனப்பான்மையில் பெண்களுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டும்.

பெண்கள் ஆணுக்குச் சமம் அல்லது உயா்வு என்றேல்லாம் கருத்துக் கொள்ள வேண்டும்.

ஆண்களுக்குப் பெண்கள் சமம் அல்லது உயா்வு என்றெல்லாம் இல்லை.

அதேபோல ஆண்களுக்குப் பெண்கள் உயா்ந்தவா்களும் இல்லை. ஆண்களுக்குப் பெண்கள் சமமானவா்களும் இல்லை.

இயற்கை அமைப்பில் பெண்கள் சிறப்பானவா்கள். முதன்மையான மதிப்பு உடையவா்கள் என்பதை உணா்ந்து மதித்து ஒவ்வொரு ஆணும் நடந்து கொள்ள வேண்டியது என்று மகாிஷி. வலியுறுத்துகிறாா்..

## பெண்களுக்குத் தேவையானவை

குடும்ப வாழ்வில், எல்லா விதமான கடமைகளையும், துன்பங்களையும். சிரமங்களையும், பொறுப்புகளையும், சுமந்து கொண்டிருப்பதில், ஆண்களைவிடப் பெண்கள்தான் அதிகமாகப் பங்கு பெற்றிருக்கிறாா்கள்.

பெண்ணினத்திற்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை நீக்கி, பெண்மையின் உயர்வை, சிறப்பை மதித்து, பெண்மைக்குப் பாதுகாப்பும் பராமரிப்பும்அளிக்க வேண்டியது ஆண்களின் கடமையாகும் என்கிறார் மகரிஷி.

பெண்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்வதற்கும், தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கும், இறைஞானம் பெறுவதற்கும், வாழக்கையில் எல்லாத் துறைகளிலும் அவர்களுக்குச் சம உரிமையையும், கூடுதலான சிறப்புச் சலுகைகளையும், அவர்கள் தேவைக்குத் தகுந்தவாறு வசதிகளும் வழங்கிப் பெண்ணினத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளைக் காலம் தாழ்த்தாமல் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

## கற்பு நெறியை பொதுவில் வைப்போம்

சமுதாயத்தில் பெண்களுக்கு மட்டும் கற்பு என்று கட்டாயப்படுத்தப்படுகிறது. ஆணுக்கில்லையா கற்பு ?

''கற்பு நிலையென்று சொல்ல வந்தால் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்''

என்று பாரதியின் புதுமைப் பெண் அழுத்தம் திருத்தமாகப் பாடுகின்றாள். ஆனால் சமுதாயத்தில் இந்த நிலை இல்லையே! இவ்வுண்மையை மகரிஷி அவர்கள் அழகாகக் கூறுகின்றார்.

''கற்புக்கு மதிப்பளிக்க இருபாலார்க்கு
    கடமை பொதுவே எனினும் தவறி விட்டால்
அற்புதமாய் இயற்கைதன் ஆட்சி மேன்மை
    ஆணைவிட்டுப் பெண்ணுக்கே சின்னம் வைக்கும்,
சற்புத்திரன் போல் அவன் உலாவ
    சமூகத்தால் அவள் தூற்றப் படுவாள் அதனால்
நற்பண்பாம் கற்பொழுங்கை உயிரின் மேலாய்
    நாடுகின்றார் அறிவிலுயர் பெண்களெல்லாம்'' (ஞா.க.)

என்ற பாடலில் கற்பைப் பற்றி ஆணுக்குக் கவலையில்லை. பெண்கள் மட்டுமே அதை ஒழுங்கென்று போற்றுகின்றார் என்று கூறுகிறார்.

## தாய்சேய் நலம் பாராட்டல்

கணவன் மனைவி தாம்பத்திய வாழ்வில் அன்போடு இருக்கும் நிலையில் பெண் கர்ப்பம் தரிக்கிறாள். பிறக்கும் குழந்தை ஊனம் இல்லாமல் அறிவொடு பிறக்கும்.

**"அஸ்வின் முத்திரை"** எனும் பயிற்சி செய்தால் தாய் வயிற்றில் குழந்தை நலமாய் வளரும் என மனவளக்கலை மூலம் பயிற்சி தரப்பட்டு வருகிறது

"பெண் சிசுவைக் கொல்வது என்பது எதிர்கால ஆண்களின் வளமான வாழ்வைக் கொல்வதாகும் என்று சிசுக் கொலை வேண்டாம்" என்று உலக சமுதாயத்திடம் வேண்டுகிறார்.

"மைந்தரில்லை என்றெவரும் வருந்தமாட்டார்,
மக்கள் அதிகம் பெற்றும் தவிக்க மாட்டார்"

மைந்திரில்லை என்று வருந்தும் மகக்ளுக்கு காயகல்பத்தையும் வழங்கியுள்ளார்.

## பெண்களின் கடமைகள்.

பெண்ணின். வாழ்க்கையை ஆழமாகக் கவனித்தால் பெண் பிறவியின் நோக்கத்தை அறியலாம்.

வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒரு பெண்ணின் கடமை மிகவும் சிறந்த ஒன்றாகும்.

அறிவு, சுகம், அரசியல், பொருள், ஞானம் என்ற ஐந்து வகையான வாழ்க்கைத் தத்துவத்தை உணர்ந்து அவற்றிற்கு மதிப்பளித்தல், தாய் சேய் நலத்தைக் கவனித்தல் ஆகிய கடமைகள் பெண்ணிற்கு உண்டு என்கிறார் வேதாத்திரியார்.

## மனைவி நல வேட்பு நாள்.

உலகமெங்கும் இன்று முதியோர் தினம், குழந்தைகள் தினம், அன்னையர் தினம், நண்பர்கள் தினம், காதலர்கள் தினம் எனக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இவையனைத்தும் உறவை வலியுறுத்திக் கொண்டாடப்படும் வழாக்களாகும். ஒவ்வொரு ஆடவனின் வெற்றிக்குப் பின்னாலும் மனைவி நிற்கிறாள். இதனை உணர்ந்தவர் மகரிஷி.

பெண்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் "மனைவி நல வேட்பு நாள்" நடத்த வேண்டியது அவசியம் என்பதை வேதாத்திரி மகரிஷி வலியுறுத்துகிறார்கள்.

மனவளக்கலை மன்றங்களில் ஆகஸ்டு 30 ஆம் தேதிமனைவி நல வேட்பு நாள் இன்று உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அப்போது கணவர் ஒரு கவியைச் சொல்லி மனைவிக்கு ஒரு பூச்செண்டை கொடுக்கிறார்.

பதிலாக, மனைவி ஒரு பழத்தை அன்புடனே கணவருக்கு அளிக்கிறாள்.

பெண்மையின் பெருமையை ஆண்கள் உணர்ந்து. மதித்து நடந்து கொள்ளவெண்டும் என்ற உயரிய நோக்கில் மனைவியை நோக்கி கணவர் பாடுகிறார்.

## மனைவி நலம் நாடி வாழ்த்துதல்

"பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரை விட்டுப்
பிரிந்து வந்து பெருநோக்கில் கடமையறம் ஆற்ற
பற்றற்றத் துறவியெனக் குடும்பத் தொண்டு ஏற்று
பண்பாட்டின் அடிப்படையில் எனைப்பதியாய்க் கொண்டேன்.
நற்றவத்தால் என் வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நலநோக்கில் அன்போடு கருணையிவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன். வாழ்த்தி மகிழ்கின்றேன்." (ஞா.க.)

இதன் மூலம் பெண்ணினத்தின் மாண்பை அனைவரும் உணர்ந்து கொள்ள நல்லதொரு வாய்ப்பு அமைகின்றது.

## பெண்களுக்கான அறக்கட்டளை

பெண்ணின் பெருமையை உயர்த்துவதற்காக, உலக சமுதாய சேவா சங்கத்தின் கிளையாக, அகில உலக பெண்கள் ஆன்மீகக் கல்வி அறக்கட்டளை ஒன்றை வேதாத்திரியார் அமைத்திருக்கின்றார்.

இதன் நோக்கம் பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும். பெண்கள் முன்னேறினால் தான் குழந்தைகள் முன்னேற முடியும்.

பெண்கள் முன்னேற்றமே குடும்ப முன்னேற்றமாகும். பெண்கள் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம்.

பெண்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள, திறமையை வளர்த்துக் கொள்ள, கிராமங்களிலுள்ள பெண்கள் அனைவரும் அகத்தவத்தையும், தத்துவத்தையும் அறிந்து கொள்ளத் தேவையான அடிப்படை ஏற்பாடுகளைச் செய்தவதற்காக இந்த அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது.

## மணமுறிவும் மறுமணமும் பெறுதல்..

கணவன் மனைவியருள் ஒருவரிடம் ஒருவர் மனப் பிணக்கம் கொள்வோர் ஆறுமாத காலம் மட்டுமே பிரிந்திரிந்து மணமுறிவு பெறலாம் என்கிறார் மகரிஷி.

இக்கால வரையறை இந்தியச் சட்டத் துறையால் ''ஒரு வருடம்''என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கருத்து ஒருமித்து வாழ விரும்பாதோர் சேர்ந்து இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் துன்பமானதாக அமையும். அதனைக் குறைக்கும் அளவாக இக்காலத்தைப் பாதியாக மகரிஷி குறைக்கின்றார்.

இவ்வாறு மணமுறிவு பெற்றோர் தங்கள் விருப்பம் போல் மீண்டும் ஒரு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இவ்வாறு செய்வதற்கு மும்முறை வாய்ப்பளிக்கினறார்.மணமுறிவும் மறுமணமும் சமுதாயத்தில் பலவாகப் பெருகாமல் தடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்துகின்றார்.

ஆண், பெண் யாராக இருந்தாலும் ஒழுங்குடன், மகிழ்வுடன் வாழ்வதற்குத் துணை தேவை. தவிர்க்க இயலாத காரணங்களால் துணை பிரிய நேரிடின் மற்றொரு துணையைத் தேடலாம்.

இது தனி மனித வாழ்வின் பாதுகாப்பு, முன்னேற்றம் கருதி மேற்கொள்ள வேண்டுமே தவிர அழகு, இச்சை கருதி அமைந்திடக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத் தான், பெருகாமல் தடுக்க வேண்டும் என்று கூறுகிறார்.

## மகரிஷி கேட்கும் சட்டஙகள்

ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு கல்வியும், வேலை வாய்ப்பும், உடற் கூறுகளைக் கொண்டு குழந்தைப் பேறு காலத்தல் சிறப்புச் சலுகைகளும் அளிக்க வேண்டும் என்கிறார் மகரிஷி.

ஆனால் சட்டத்தில், சமுதாயத்தில் உள்ள குறைபாடுகளால் பெண்கள் அவற்றைப் பெற முடியாதிருக்கிறது.

ஆகையால் சட்டங்களை உருவாக்கும் போது பெண்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்கிறார் .

ஒருலக ஆட்சி அமைக்கும் தீர்மானத்திலேயே பெண்களுக்கு அளிக்க வேண்டிய சிறப்புச் சலுகைகளை அளிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றி உள்ளார் மகரிஷி.

வயது பொருந்தா திருமணத்தால் வாடிப்போன பெணகள் எத்தனையோ பேர். இந்தக் குறையைப் போக்கி நிறைவு காண சட்டம் போடச் சொல்லுகிறார்.

''பல் விழுந்த கிழ வயதில்கூட பல்லோர்
பரம ஏழையான இளம் பெண்கள் தம்மை
கல்யாணம் விருப்பம் போல் செய்துக் கொள்ளும்
கருணையற்ற, பலாத்கார முறையைப் போக்க
இல்வாழ்வில் பெண்ணை விட ஆணின் ஆண்டு,
ஈராறின் மேல் இருக்கலாக தென்ற,
நல் முறையை அமுல் நடத்தும் சட்டம் போட
நம் தேச பொது ஆட்சிக் கெழுதி விட்டோம்..'' (ஞா.க.)

பாலியல் கொடுமை, பலாத்காரம், கற்பழிப்பு இவைகளுக்கு மூல வேர் எது என்று ஆராய்ந்தார்.

''தொலைத் திட்டோம் தீமைதரும் விபசாரத்தைத்
தூங்கிவிட்டோம் வேர்களைய அது துளிர்த்து
கலைச் சிகரமாய் விளங்கும் படங்களுடே
களங்கத்தை வளர்க்குதெனக் கண்டோம் இப்போ
மலைக்காமல் ஆராய்ந்து ஒன்று கூடி
மாற்றுமுறை வகுத்திடுவோம், சட்டம் செய்வோம்,
விலைக்காக பெண்மைதனைப் பயன்படுத்தும்
வீணர்களின் செய்கைக்கு முடிவு காண்போம்.'' (ஞா.க.)

வேதாத்திரிரின் இத்திட்டங்கள் சட்டமாக வரும் நாட்கள் அருகே உள்ளன.

### சொத்தில் சமபங்கு பெண்களுக்கு வேண்டும்.

பெற்றோர் ஈட்டிய சொத்தில் பெண்களுக்கு சமபங்கு வேண்டும் என்று வாதிட்டவர் மகரிஷி.

மணவாழ்க்கை ஏற்று மருவி வந்த மருமகளுக்கு கணவன் வீட்டிலும் சொத்தில் சமமமாகக் கொடுக்க வேண்டும் என்று பெண்களுக்காக மறுபடியும் வழக்கிடுகிறார்.

''ஒருவருக்கொரு பெண் போதும், ஒவ்வாத போது வாழ்வு
திருமணம் மாற்றிக் கொள்ளும் தெய்வீக உரிமை தன்னை
இருவர்க்கும் ஈந்து, பெற்றோர் ஈட்டிய மிகுதியான
பொருளிலே சமபங்கீயும் புகழுள்ள சட்டம் வேண்டும்'' (ஞா.க.)

பெண்கள் முன்னேற்றம் குறித்த உலகளவிலான சிந்தனைகளைத் தொகுக்க முற்படுவோர் வேதாத்திரி மகரிஷியை விடுக்க இயலாது.

## பெர்ட்ராண்ட் ரசலின் தத்துவத்தில் தருக்க அணுவாதம் வேதாத்திரியத்தின் மொழிச் சிந்தனைகளும்.

''தருக்க அணுவாதம்'' என்ற கருத்தை ரஸ்ஸல் வைத்திருக்கிறார், இதன் முக்கிய கருத்து என்னவென்றால், மொழியை சிறிய கூறுகளாக, ''தருக்க அணுக்களாக'' சிதைக்க முடியும். அவர்களின் உதவியுடன், நீங்கள் உருவாக்கிய அனுமானங்களை வெளிப்படுத்தலாம் மற்றும் அது உண்மையா என்பதை இன்னும் துல்லியமாக தீர்மானிக்க முடியும்.

உதாரணமாக, வாக்கியத்தை கவனியுங்கள்: ''அமெரிக்காவின் மன்னர் வழுக்கை உடையவர்.'' எளிமையானது என்றாலும், பின்வரும் மூன்று தருக்க அணுக்களாக இது சிதைக்கப்படலாம்:

1. ''அமெரிக்காவின் மன்னர் இருக்கிறார்.''
2. ''அமெரிக்காவில் ஒரு ராஜா இருக்கிறார்.''
3. ''அமெரிக்காவின் மன்னருக்கு முடி இல்லை.''

பெறப்பட்ட முதல் அணுவைப் பகுப்பாய்வு செய்தால், அமெரிக்காவில் எந்த அரசனும் இல்லை என்பது தெரிந்திருப்பதால், அதன் பொய்யை உடனடியாக ஒருவர் கவனிக்க முடியும்.

எனவே, ''அமெரிக்க மன்னர் வழுக்கை'' என்ற முழு திட்டமும் தவறானது என்று நாம் முடிவு செய்யலாம்.

இருப்பினும், இந்த முன்மொழிவு உண்மையிலேயே தவறானது என்று அர்த்தமல்ல, ஏனெனில் ''அமெரிக்காவின் ராஜாவுக்கு முடி உள்ளது'' – என்பதும் எதிர் கூற்று உண்மையாக இருக்காது.

ரசல் உருவாக்கிய தர்க்கரீதியான அணுக்கருவுக்கு நன்றி, உண்மையின் நம்பகத்தன்மையையும் அளவையும் தீர்மானிக்க முடியும்.

இது தானாகவே தத்துவவாதிகள் விவாதித்த ஒரு கேள்வியை இன்றுவரை எழுப்புகிறது: ஏதாவது உண்மையிலேயே பொய் அல்லது உண்மை இல்லை என்றால், அது என்ன ?

## வேதாத்திரியத்தின் மொழிச் சிந்தனைகள் வித்தியாசமானது

பொதுவாக அனைத்து மக்களிடையேயும் தாய்மொழியை உயர்வாகவும் இனிமையானதாகவும் கருதும் மனப்பான்மை காணப்படுவதுண்டு.

ஆனால், முறையான சமூகச் செயல்பாடுகளை நிறைவேற்றுவதில் பிற மொழிகளைப் போன்று தங்கள் தாய்மொழியை ஆற்றலுடன் பயன்படுத்த இயலாது என்று கருதுகிறவர்களும் உள்ளனர்.

இத்தகைய மனப்பான்மை ஒரு பன்மொழிச் சூழல் நிலைப்பதற்கு ஏதுவாக அமைகிறது.

இந்நிலையில் தற்போதைய மொழிச்சூழல் மற்றும் மொழிக் கொள்கையைத் தந்துள்ளார் வேதாத்திரி மகரிஷி.

- மனிதர்கள் ஒருவர் கருத்தை ஒருவர் அறியக் கொண்ட வேகமே பாஷையாகத் தோன்றியது. எல்லா வகையிலும் இந்த பாஷைதான் மனித இன முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது. (உலக சமாதானம். ப. 169)

இங்கு, கருத்துப் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டே மொழி தோன்றியது என்பதையும் மனிதச் சமுதாய வளர்ச்சிக்கு

அடிப்படையாக அமைவது மொழி என்ற கருத்தையும் வெளிப்படுத்துகிறார்.

உலகில் பல்வேறு மொழிகள் தோன்றுவதற்கான காரணங்களைச் சுட்டிக் காட்டுவதோடு, இன்றைய நிலையில்.

மனிதன் வாழ ஒரு மொழியே போதும் என்ற கருத்தையும் பினவருமாறு வைக்கிறார்.

- ஆதி மனிதர்கள், ஆங்காங்கே திட்டுத் திட்டாகக் காட்டிலும் குகைளிலும், ஒரு பகுதியில் வாழ்ந்தவர்களுக்கு மற்ற பகுதியில் வாழ்ந்தவர்களின் தொடர்பும் ஒரு தேசத்தில் வாழ்நதவர்களுக்கு மற்ற தேசத்தவரின் தொடர்பும் இல்லாமல் வாழ்ந்திருக்கலாம்.
- அவரவர்களின் சொற்குறிப்புகள், வெவ்வேறு ஒலிபேதங்களாய் இருந்தன. அறிவு வளரவளர அவைகள் திருத்தப்பட்டு பாஷைகளாகக் கொள்ளப்பட்டன.
- மனிதகுலம் ஒன்றே என்றும், அகில உலக மக்களும் ஒன்று கூடியே வாழ வேண்டும் என்றும் இப்போது விரும்புகிறோம். அது அவசியமுமாகிவிட்டது.
- ஆகையால், இனி நமக்குப் பலவிதமான மொழிகள் தேவையில்லை. நாம் வாழ ஒரு மொழியே போதுமானது. (உலக சமாதானம் ப.170)

வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகப் பொதுமொழியின் தேவையையும் வலியுறுத்துகின்றார். அத்தகைய உலகப் பொதுமொழியை உருவாக்குவது எப்படி என்ற கருத்தையும் வெளிப்படுத்துகிறார்.

- அகில தேசங்களின் தலைவர்களும், ஆராய்ச்சியாளர்களும், பல மொழி வல்லுநர்களும் சேர்ந்து மனிதர்கள் எளிதாகப் பேச, கற்க, எழுதத் தகுதியான ஒரு மொழியைத் தேர்ந்தெடுத்து. அதை உலகில் இனி பிறக்கும் குழந்தைகளுக்கெல்லாம் கற்றுக் கொடுக்க வேண்டும். (உலகசமாதானம் – (பக்.170.)

எல்லா மொழிகளும் மனிதனுக்குச் சொந்தமே என்ற கருத்தையும் மகரிஷி வலியுறுத்துகிறார்.

- மொழிக்கு மொழி உயர்வு தாழ்வோ, சொந்தம் விரோதம் என்றோ நினைப்பதற்கு இடமில்லை என்றும் இவ்வுண்மையை அறிந்து மொழிகளில் உள்ள அதிகப் பற்று வெறுப்பு முதலானவைகளை அனைவரும் விட வேண்டும்.

(உலக சமாதானம், (பக்.172)

உலகப் பொதுமொழியின் தேவையை வலியுறுத்தும் மகரிஷி அத்தகைய மொழி எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றார்.

- சிரமமில்லாமல் எழுதவும் படிக்கவும், குழந்தைகள்கூடத் தெளிவுடன் உச்சரிக்கவும் ஏற்ற தனிச்சிறப்படைய ஒரு மொழியையே எதிர்கால உலகப் பொதுமொழியாக் தேர்ந்தெடுக்க வேண்டும். (உலக சமாதானம்.( பக்.174)

அத்தகைய மொழியில் கலைச் சொற்கள் இல்லையே என்று எண்ண வேண்டியதில்லை என்றும், மனிதர்கள் பேசும் மொழிகளில் நிறைநதிருக்கும் கலைச் சொற்களை அப்படியே உச்சரிப்பை மாற்றாமல், எழுத்தை மாத்திரம் மாற்றி எழுதிக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார்.

தகுந்த கலைச்சொற்கள் இல்லையென்றால் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை என்ற கருத்தை வேதநாயகம் பிள்ளை போன்ற தமிழறிஞர்களும் வலியுறுத்தி உள்ளனர்.

- ரசலும் மகரிஷியும் புரட்சி எழுத்தாளர்கள் வரிசையில் வருபவர்கள்.
- ரசலும் மகரிஷியும் ஆன்ம ஞானிகள் வரிசையிலும் வருபவர்கள்.
- இருவரும் பிறவி எழுத்தாளர்கள். இருவரின் எழுத்துக்களிலும் சொல் புதிது, பொருள் புதிது. புரிந்து கொள்வதும் எளிது.
- ரசலும் மகரிஷியும் ஒருவகைச் சித்தர்கள்.
- நாட்டுமக்கள் அடிமைத் தளையை உடைக்கப் பொங்கி எழுந்தவர் ரசல். ஆன்மாவின் அடிமைத் தளையை உடைக்க வீறு கொண்டு எழுந்தவர் மகரிஷி.
- ரசலும் மகரிஷியும் சமுதாய சீர்திருத்தவாதிகள்
- ரசலும் மகரிஷியும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மாற்றி புதிய சமுதாயத்தைப் படைக்க வந்த ஞானிகள்.
- ரசலும் மகரிஷியும் பெண் விடுதலைக்காகப் போராடியவர்கள்.
- ரசலும் மகரிஷியும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினர்.
- ரசலும் மகரிஷியும் பன்முக ஞானம் படைத்தவர்கள்.
- பல செய்திகளை ரசல் முன்மொழிகிறார். மகரஷி அறிவியல் கண்ணோட்டத்துடன் அவைகளை வழி மொழிகின்றார்.
- ரசலும் மகரிஷியும் மானுடப் பற்றாளர்கள்.
- மொழி வளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற்றம் எல்லாம் இணைந்து–இணக்கமாகி, இவர்களை ஓர் இணையற்ற சிந்தனையாளர்களாக ஆக்கியிருக்கின்றன.
- எளிய சொற்களால் எழுச்சியூட்டும் இவர்களது கவிதை வரிகளில் – மொழி வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், உலக சமாதானத்திற்குமான உரத்த சிந்தனைகள் தெரிகின்றன.

- ரசலும் மகரிஷியும், தம் எழுத்துக் கைகளால் இந்த தரணியைத் தட்டி எழுப்புவதைத் தலையாயக் கடமையாய்க் கொண்டிருந்தனர்.
- ரசலும் மகரிஷியும், பிற்போக்குச் சக்திகளின் பிடரியைப் பிடித்து உலுக்கி, முற்போக்குக் கருத்துகளை முன் வைப்பவர்கள்.
- இருவரும் போரை வெறுத்தார்கள். போரின் கொடுமையை , மானுடத்திற்கு எடுத்துச் சொல்லி போர் தவிர்க்க வேண்டும் என்று பாடுபட்டவர்கள்
- ரசலும் மகரிஷியும் உலக அமைதிக்கு வித்திட்டவர்கள்
- ஒரு யுக விழிப்பை ஏற்படுத்துவதே இவர்களது இருவரது இலக்காக இருந்திருக்கிறது. ––––அந்த முயற்சியிலே இவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது.

## துணைநின்ற நூல்கள்


- ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரியப் பதிப்பகம், ஈரோடு
- போரில்லா நல்லுலகம், மன்னார்குடி பானுகுமார், இணையதளம் றறற.டெரேமர அயச.டை
- வேதாத்திரியத் தத்துவங்கள் மன்னார்குடி பானுகுமார், இணையதளம் றறற.டெரேமர அயச.டை
- ஞாலம் போற்றும் ஞானிகள்,மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
- ஞானதீபமும் ஞானஒளியும், மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
- வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் **5000**, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
- 1969, Dear Bertrand Russell... A Selection of his Correspondence with the General Public 1950–1968 (edited by Barry Feinberg and Ronald Kasrils), London: George Allen and Unwin.
- 1900, Sur la logique des relations avec des applications à la théorie des séries, Rivista di matematica 7: 115-148.
- 1901, On the Notion of Order, Mind (n.s.) 10: 35-51.
- 1902, (with ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட்), On Cardinal Numbers, American Journal of Mathematics 23: 367-384.lllll

பானுகுமார் படைப்புலகம்
Free PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஒய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.

7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை
28. வேதாத்திரியத்தில் அறம்

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரிஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்

4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி

14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து

14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா ?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு

7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா ? அரசியல் ஞானியா ?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள் ?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது ? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன் ?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா ?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார் ?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## வரலாறு மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. மன்னார்குடி வரலாறு

## பயண நூல்கள்

1. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே !
2. அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்
3. தொலைந்து போன உறவுகள்
4. பத்மாவும் கதவும்

## ஆராய்ச்சி

## நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## பானுகுமார் படைப்புலகம்

1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

## கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் (மானுடம் வென்றதம்மா)

## உலகப் புகழ்பெற்ற தத்துவஞானிகளும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு இலக்கியம்)

1. லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும்
2. ஹிப்பாக்ரட்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
3. ஹென்றிவேர்ட்ஸ்வொர்த் லாஜ்பெலோவும் வேதாத்திரி மகரிஷியும்
4. பெர்ட்ராண்ட் ரசல்லும் வேதாத்திரி மகரிஷியும்
5. கலில் ஜிப்ரானும் வேதாத்திரி மகரிஷியும்
6. கன்பூசியனிசமும் வேதாத்திரி மகரிஷியும்
7. தஸ்தயேவ்ஸ்கியும் வேதாத்திரி மகரிஷியும்
8. ஜலாலுதீன் ரூமியும் வேதாத்திரி மகரிஷியும்
9. லாவோசும் வேதாத்திரி மகரிஷியும்
10. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரி மகரிஷியும்
11. சாக்கரட்டிஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்

12. அரிஸ்டாடிலும் வேதாத்திரி மகரிஷியும்
13. பிளேட்டோவும் வேதாத்திரி மகரிஷியும்
14. செனகாவும் வேதாத்திரி மகரிஷியும்
15. மிர்தாவின் புத்தகமும் வேதாத்திரியமும்
16. நீட்சேயும் வேதாத்திரி மகரிஷியும்
17. சர் ஐசக் நியூட்டனும் வேதாத்திரி மகரிஷியும்
18. வால்டேரும் வேதாத்திரி மகரிஷியும்
19. ரால்ப் வால்டோரா எமர்சனும் வேதாத்திரி மகரிஷியும்
20. சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரஷியும்.
21. காரல் மார்க்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
22. இராபர்ட் கிரீன் இங்கர்சாலும் வேதாத்திரியும்.
23. சிகமண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிஷியும்.
24. ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிஷியும்.
25. ஐன்ஸ்டைனும் வேதாத்திரி மகரிஷியும்
26. கன்பூசியஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
27. பெஞ்சமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
28. ரூஸ்வெல்டும் வேதாத்திரி மகரிஷியும்
29. வேட்ஸ்வொர்த்தும் வேதாத்திரி மகரிஷியும்
30. மில்டனும் வேதாத்திரி மகரிஷியும்

Youtube channel Name – vethathiriam Banukumar

Face book group வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்